Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | புதன்கிழமை | ஆனி 15 ஆம் நாள் | பக்கங்கள்: 16
கதிர் : 215 | 29 ஜூன் 2022 | வள்ளுவர் ஆண்டு 2053 | விலை : ரூ. 50




# இலங்கைக்கு மீண்டும் அமெ. கைகொடுக்கும்!



**உணவுப் பாதுகாப்புக்காக 20 மில். டொலர்**
**ஜி-7 மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவிப்பு**

**கொழும்பு, ஜூன் 29**

**இலங்கையிலுள்ள சிறார்கள் மற்றும் கர்ப்பிணிகளின் உணவுப் பாதுகாப்புக்காக அமெரிக்கா 20 மில்லியன் டொலரை வழங்கவுள்ளது.**

15

## பஸ் கட்டணம் 30% உயரும்!

கொழும்பு, ஜூன் 29
எதிர்வரும் முதலாம் திகதி முதல் பஸ் கட்டணங்களை 30 சதவீதத்தால் உயர்த்த வேண்டுமென்று பஸ் சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ள நிலையில், அந்தக் கோரிக்கை தொடர்பான பரிந்துரை இன்று போக்குவரத்து அமைச்சுக்கு அறிவிக்கப்படும் என்று தேசிய போக்குவரத்து ஆணைக் குழு தெரிவித்தது.

15

## நெருக்கடியை தீர்ப்பதற்கு கோத்தாபய முயற்சியாம்!

*கட்டுக்கதை என்கின்றன எதிர்க்கட்சிகள்*

கொழும்பு, ஜூன் 29
நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முயற்சிகளை எடுத்துள்ளார் என்று ஆளுங்கட்சி நாடாளு

15

எரிபொருளுக்காக கட்டாரிடம்

## கெஞ்சுகிறார் காஞ்சன!

கொழும்பு, ஜூன் 29
கட்டார் சென்றுள்ள மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர அந்த நாட்டின் எரிசக்தி விவகார இராஜாங்க அமைச்சர் சாட் ஷெரிடா அல் காபியை நேற்றுச் சந்தித்தார்.
அரசுடமையான கட்டார் எனேர்ஜி மற்றும் கட்டார் அபிவிருத்தி நிதியத்தின் உதவியுடன் இலங்கையில் தற்போது ஏற்பட்

15



## சீராக டீசல் கிடைத்தால் பஸ் சேவை தடைப்படாது!

*தனியார் பஸ் சங்கங்கள் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜூன் 29
யாழ்ப்பாணம் மாவட்டத்துக்குள் இடம்பெறும் தனியார் பஸ் சேவைகள், தொடர்ச்சியாக எமக்கு டீசல் வழங்கப்பட்டால் வழமை போன்று சேவை நடைபெறும் என்று யாழ். மாவட்ட கூட்டிணைக்கப்பட்ட பஸ் கம்பனிகளின் இணையத்தின் தலைவர் பொ.கெங்காதரன் தெரிவித்தார்.

15

## மூன்று நாள்கள் மட்டுமே தபாலகங்கள் இயங்கும்!

பணியாளர்கள் கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஜூன் 29
நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக அஞ்சல் அலுவலகங்கள் மற்றும் உப அஞ்சல் அலுவலகங்களை வாரத்தில் மூன்று நாள்கள் மட்டும் திறப்பதற்கு அஞ்சல் திணைக்களம்

15

## அத்தியாவசியக் கடமைகளில் ஈடுபடுவோருக்கே எரிபொருள்

*யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜூன் 29
எதிர்வரும் முதலாம் திகதி முதல் 10ஆம் திகதிவரையில் அத்தியாவசியக் கடமைகளில் ஈடுபடும் அலுவலர்களுக்கு மட்டுமே எரிபொருள் விநியோகிக்கப்படும் என்று யாழ்ப்பாணம் மாவட்டச்

15

பெற்றோல் விநியோகம்

## ஐ.ஓ.சி. மட்டுப்பாடு

கொழும்பு, ஜூன் 29
லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில் நேற்று இரவு முதல் வாகனங்களுக்கான பெற்றோல் விநியோகத்தில் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.
மோட்டார்

15

## மின் கட்டண உயர்வு வந்தது முன்மொழிவு

கொழும்பு, ஜூன் 29
மின் கட்டண திருத்தம் தொடர்பான பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் முன்மொழிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. மின் கட்டண அதிகரிப்பு தொடர்பில் மின்சார சபை முன்வைத்த முன்மொழிவுகளுக்கு, பதிலளிக்கும் வகையில் கட்டணங்கள்

15

## பதிவாளர் நாயகம் திணைக்கள சேவைகளுக்கும் வரையறை

கொழும்பு, ஜூன் 29
பிரதேச செயலகங்கள் ஊடாக பிறப்பு, இறப்பு மற்றும் திருமணச்சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் காணி பதிவுச் சேவைகள் எதிர்வரும் 10 நாள்களுக்கு திங்கள் மற்றும் புதன்கிழமைகளில் மட்டுமே

15




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒருநாள் கடவுச்சீட்டு சேவை வடக்கில் விரைவில் ஆரம்பம்!

## சொந்தப் பணத்தை முதலிடுகின்றார் அமைச்சர் தம்மிக்க பெரேரா




**யாழ்ப்பாணம், ஜூன் 29**

**வடக்கில் உள்ள பிராந்திய அலுவலகத்தில் ஒருநாள் கடவுச்சீட்டு சேவை விரைவில் ஆரம்பிக்கப்படும். இதற்காக எனது சொந்தப் பணத்தை முதலிட உள்ளேன் - இவ்வாறு முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக்க பெரேரா தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'மாத்தறை, கண்டி, வவுனியா மற்றும் குருநாகல் பகுதிகளில் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் பிராந்திய அலுவலகம் இருந்தாலும், ஒரேநாளில் கடவுச்சீட்டு வழங்கும் சேவை அங்கு இடம்பெறுவதில்லை. இதனால்தான் கொழும்பு நோக்கி வருகின்றனர்.

எனவே, குருநாகலைத் தவிர ஏனைய பிராந்திய அலுவலகங்களில் ஒருநாள் கடவுச்சீட்டு வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும். வவுனியாவில் இதற்கான சேவையை வழங்க எனது சொந்தப் பணத்தை முதலிடவுள்ளேன். விலைமனு கோரல் இடம்பெற்றால் மூன்று மாதங்கள் செல்லும். அதனால்தான் சொந்தப் பணத்தை முதலிடுகின்றேன்.

எனக்கான பட்ஜெட்டை உருவாக்கிக் கொண்டுதான் நான் இந்தக் கதிரைக்கு வந்தேன். நாட்டு மக்களுக்காக மாதம் 50 மில்லியன் ரூபா செலவிடவுள்ளேன். அரச ஒதுக்கீடுகளை எதிர்பார்க்கவில்லை' - என்றார். (ம)

## நீதிமன்ற அவமதிப்பு புதிய சட்டம் விரைவில்

கொழும்பு, ஜூன் 29

நீதிமன்ற அவமதிப்புத் தொடர்பான புதிய சட்டத்தை உருவாக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ச தனது பிரேரணையை அமைச்சரவையின் ஒப்புதலுக்காக சமர்ப்பித்துள்ளார். நீதிமன்ற அவமதிப்பு என்பது இலங்கை சட்டத்தில் தெளிவாக வரையறுக்கப்படாத காரணத்தினால், தற்போது அவ்வாறான வழக்குகளை விசாரித்து முடிவெடுப்பதற்கு தெளிவான மற்றும் சீரான நடைமுறை இல்லை.

இந்தப் புதிய சட்டத்தின் அறிமுகமானது நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்தையும், நீதி நிர்வாகத்தில் தலையிடும் வரம்புகள் மற்றும் கருத்துச் சுதந்திரத்தின் வரம்புகளையும் வரையறுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

*சுகாதாரத் தொழிற்சங்கத்தினர்*

## இன்றும் நாளையும் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, ஜூன் 29

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் இடைநிலை சுகாதார தொழிற்சங்கத்தினர் இன்றும் நாளையும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

## 22ஆம் திருத்தம் வர்த்தமானியில்!

*அமைச்சரவை அனுமதி*

கொழும்பு, ஜூன் 29

அரசமைப்பின் 22ஆவது திருத்தத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரசமைப்பின் 22 ஆவது திருத்தத்துக்கு கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கொள்கை ரீதியான அங்கீகாரம் வழங்கப்பட்டது. இதையடுத்து 22 ஆவது திருத்தம் தயாரிக்கப்பட்டது.

இந்த நிலையில் அரசமைப்பின் 22 ஆவது திருத்தத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிப்பதற்கும் நீதி அமைச்சர் முன்வைத்த திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம)

## 6 மாதங்களே என் இலக்கு!

*முடியாவிட்டால் வீடு செல்வேன் தம்மிக்க பெரேரா தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 29

'மக்கள் பட்டினியால் வாடினால், நாம் மட்டும் உண்பதில் அர்த்தம் இல்லை. ஆக, சென்று எதையாவது செய் எனக்கூறியே அம்மா என்னை நாடாளுமன்றம் அனுப்பி வைத்தார். ஆறு மாதங்கள்தான் எனது இலக்கு. அதற்குள் எதையாவது செய்ய இயலவில்லை என்றால் பதவியைத் துறந்து வீட்டுக்குச் செல்வேன் என்று இலங்கையின் பெரும் கோடீஸ்வரரும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமான தம்மிக்க பெரேரா தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:-

என்னைபோல் ஒருவருக்கு 6 மாதங்களுக்குள் மக்களுக்கு முன்னேற்றகரமான எதையாவது செய்ய முடியாவிட்டால், பதவி வகித்து என்ன பயன்? வங்குரோத்தடைந்த நிறுவனங்களைப் பொறுப்பேற்று, அவற்றைக் கட்டியெழுப்பும் நிர்வாகத்திறன் உள்ள என்னால், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையையும் வெற்றிகொள்ள முடியும் - என்றார். (ம)

## ஊடகச் செயற்பாட்டுக்கு எரிபொருள் வழங்குக

கொழும்பு, ஜூன் 29

ஊடகங்களுக்குத் தேவையான எரிபொருளை வழங்குங்கள் என இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் எரிசக்தி அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என வெகுசன ஊடக அமைச்சுத் தெரிவித்துள்ளது.

ஜூலை 10 ஆம் திகதி வரை அத்தியாவசிய சேவைகளுக்காக மாத்திரமே எரிபொருள்களை விநியோகிக்க வேண்டும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஏனைய அனைத்துத் துறைகளையும் சேர்ந்தோரை தத்தமது வீடுகளில் இருந்து பணிபுரியுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் அறிக்கை ஒன்றை வெளியிட்டு ஊடகங்களுக்கு எரிபொருள் பெற்றுத் தரவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். (ச-இ)

## நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்வதில் சிக்கல்!

*எம்.பிக்களுக்குக் கூடுதல் செலவாம்*

கொழும்பு, ஜூன் 29

தற்போதைய எரிபொருள் நெருக்கடி காரணமாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்வதில் சிரமத்தை எதிர்கொள்கின்றனர் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவாதன தெரிவித்தார்.

ஓர் அமர்வில் கலந்துகொள்வதற்கு யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு 62 ஆயிரம் ரூபாவும் மாத்தறை நாடாளுமன்ற உறுப்பினருக்கு ஒரு நாளைக்கு 42 ஆயிரம் ரூபாவும் செலவாகின்றது. தற்போதைய சூழ்நிலை காரணமாக நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் பேணுவது



கடினமாக உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாடிக்கையாளரின் நலன்கருதி வீட்டிலிருந்தே விளம்பரங்களை உதயனுக்கு அனுப்பும் வசதி!

எரிபொருள் நெருக்கடியால் உங்கள் அபிமான உதயன் பணிமனைக்கு வந்து விளம்பரங்களை கையளிக்க முடியாதுள்ள நடைமுறைச்சிக்கலைத் தீர்க்கும் வகையில்,



இனிமேல் நீங்கள் இருக்குமிடத்தில் இருந்தபடியே உதயனுக்கு விளம்பரங்களை
மின்னஞ்சல்/ வட்ஸப்/ வைபர்
போன்றவற்றின் ஊடாக அனுப்பி வைக்க

விளம்பரக் கட்டணத்தை , வங்கிகளில் நேரடியாகவோ அல்லது ஒன்லைன் மூலமோ வைப்பிட்ட உறுதிச்சிட்டையின் புகைப்படத்தை அனுப்பிவைப்பதனூடாக விளம்பரம் பிரசுரமாவதை உறுதி செய்யலாம்.

வைபர், வட்ஸப் ஊடாக விளம்பரங்களைச் செம்மை பார்க்கும் வசதியும் வழங்கப்படும்.

விளம்பரங்களை அனுப்பவேண்டிய வட்ஸப்/வைபர் இலக்கம்
077 120 9996
மின்னஞ்சல்: advt@uthayan.com


## மே 9 வன்முறை ஆணைக்குழுவிடம் கமால் வாக்குமூலம்

கொழும்பு, ஜூன் 29

காலிமுகத்திடல் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் கடந்த மே 9 இல் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்றுமுன்தினம் பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரத்ன முன்னிலையாகியுள்ளார்.

இதன்போது பாதுகாப்புச் செயலாளரின் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது எனவும் அத்துடன் முன்னாள் அமைச்சர்களாக சன்ன ஜயசுமன மற்றும் மருத்துவர் ரமேஷ் பத்திரண ஆகியோரிடமும் ஆணைக்குழு வாக்குமூலம் பெற்றுள்ளது. (ச-இ)

# எரிபொருள் தேசங்களின் நிறுவனங்கள் இனி இலங்கையில் நேரடி வியாபாரம்!

**கொழும்பு, ஜூன் 29**



**எரிபொருளை உற்பத்தி செய்யும் நாடுகளின் நிறுவனங்கள் இலங்கையில் எரிபொருளை இறக்குமதி செய்யவும், சில்லறை விற்பனையில் ஈடுபடுவதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.**

எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர முன்வைத்த திட்டத்துக்கே இவ்வாறு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கையின் எரிபொருள் இருப்பு முற்றாக இல்லாமல் போயுள்ள நிலையில், 'அறிவிக்கப்படாத' பொதுமுடக்கம் ஒன்றுக்குச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ள நிலையில், அமைச்சரவையால் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கட்டார், டுபாய் போன்ற நாடுகளின் எரிபொருள் முகவரகங்கள் இலங்கையில் எரிபொருள் விற்பனையில் நேரடியாக ஈடுபடுவதற்குரிய சாத்தியப்பாடுகள் அதிகம் இருக்கின்றன என்று நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ம)

# போராளிகளை விசாரிக்காமல் மாபியாக்களை கண்டுபிடியுங்கள்

## புலனாய்வுப் பிரிவுக்கு செல்வம் எம்.பி அறிவுரை

வவுனியா, ஜூன் 29

மறுவாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளைத் தொந்தரவு செய்யாமல், எரிபொருளைப் பதுக்கும் மாபியாக்களைக் கண்டுபிடிப்பதற்கு புலனாய்வுப் பிரிவினர் முன்வர வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நேற்றையதினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அத்தியாவசியத் தேவைகளுக்கு மாத்திரமே எரிபொருள் வழங்கப்படும் என்ற அரசின் அறிவிப்பானது சிறுபிள்ளைத்தனமானது. ஏராளமான மக்களின் வாழ்வாதாரம் இன்று பறிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த நடைமுறை உடனடியாகத் திரும்பப் பெறப்பட்டு அனைத்து மக்களுக்கும் எரிபொருள் வழங்கப்படவேண்டும்.

இந்த அரசிடம் எந்தத் திட்டமும் இல்லை. புதியவர்கள் வந்தபின்னரும் சரியான திட்டமிடல் இல்லை என்றால் எமது மக்களே எல்லாவிதத்தாலும் பாதிக்கப்படுவார்கள்.

இன்று அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன. இந்த நேரத்தில் எரிபொருளைக் கோரி ரஷ்யாவுக்கும் கட்டாருக்கும் செல்லும் அமைச்சர்கள் அந்த முஸ்தீபை முன்னமே செய்திருக்கவேண்டும். களவு செய்பவர்களுக்கும், பதுக்குபவர்களுக்கும் தாராளமாக எரிபொருள் கிடைக்கின்றது.



மறுவாழ்வுபெற்ற விடுதலை புலி உறுப்பினர்களை புலனாய்வுப் பிரிவினர் ஒவ்வொரு நாளும் சென்று விசாரணை மேற்கொள்கின்றனர். நான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்கிறேன். இவற்றை எல்லாம் இடைநிறுத்தி விட்டு எரிபொருளை பதுக்குபவர்களை கண்டறியுங்கள் என்றார். (ம-110)




இப்ப எங்கட சனத்துக்கு கனவிலைகூட பெற்றோலின்ர நினைப்புத்தான். எங்க பெற்றோல் குடுக்கிறாங்கள் எண்டெல்லாம் வட்ஸப் குரூப் எல்லாம் உருவாக்கி, அதில வாற தகவலை வைச்சுக் கொண்டு, பெற்றோல் குடுபடுற செற்றுக்கு ஓடிப்போய், கியூவை இன்னும் நீளமாக்கிறதுதான் இப்ப எல்லாருக்கும் முழுநேர வேலை.

வலிகாமம் பகுதியில ஒருத்தரின்ர வீட்டில முந்தி ரண்டு மோட்டார் சைக்கிள் தான் நிண்டது. இப்ப என்னெண்டால் இருபது மோட்டார் சைக்கிளுக்கு கிட்ட அவர் வீட்டு முற்றத்தில நிக்குது. 'என்னடா, இது பெற்றோல் இருக்கேக்கையே ரண்டு பைக் வைச்சிருந்த ஆள், இப்ப இருபது பைக் வைச்சிருக்கிறாரே? வீட்டில நாலைஞ்சு பேர்தானே. இவைக்கு ஏன் இவ்வளவு பைக்?' எண்டு அக்கம் பக்கத்தில உள்ளவை இதைப்பற்றித்தான் ஒரே ஆராய்ச்சி. அந்த ஆராய்ச்சியில கடைசியா அவை கண்டுபிடிச்ச விசயத்தால அவைக்கே மயக்கம் வராத குறை. அந்த இருபது பைக்கையும் வைச்சு, அவர் பிஸ்னஸ் தொடங்கியிருக்கிறார். ஊரில உள்ள வேலைவெட்டி இல்லாத பெடியளுக்கு ஆளுக்கு ஒரு பைக்கும் காசும் குடுத்து விடுவார். அந்தப் பெடியளும் எங்கையெல்லாம் பெற்றோல் அடிக்கினமோ, அங்கை போய் வரிசையில நிண்டு எப்பிடியோ ராங்க் முழுக்க பெற்றோல் நிரப்பிக்கொண்டந்து அவரிட்டக் குடுப்பினம். பெற்றோல் அடிச்சதை போக மிச்சக் காசையும் குடுத்தால், அவர் ஆளுக்கு ரண்டாயிரம் குடுப்பார். பிறகு பைப் வைச்சு, ராங்கில உள்ள பெற்றோலை இழுத்துப் போட்டு மற்ற ஆளிட்ட அந்த பைக்கை குடுத்துவிடுவார். இப்பிடியே அவர் வீட்டில உள்ள இருபது பைக்கும், யாழ்ப்பாணத்தில உள்ள எல்லாப் பெற்றோல் செற்றுக்கும் ரவுண்டடிச்சபடியே இருக்குதாம்.

இப்பிடி ஊரெல்லாம் மேய்ஞ்சு அடிச்ச பெற்றோலை, லீற்றர் ஆயிரத்து ஐநூறு, இரண்டாயிரம் எண்டு ஆக்களுக்கு ஏத்தமாதிரி வித்துக் காசாக்கிறார். அவசரமா ஆஸ்பத்திரிக்கு போக வேண்டியவை, வெளிநாட்டாலை வந்து நிக்கிறவை காசைப் பார்க்காமல் அவர் சொல்லுறவிலைக்கே பெற்றோலை வாங்கிக் கொண்டு போகினமாம். அநேகமா இந்தப் பெற்றோல் பிரச்சினை தீரமுதல், அவர் ஒரு பணக்கார முதலாளியா வந்திடுவார். அந்தளவுக்கு பெற்றோல் யாவாரம் அமோகமா நடக்குதாம். இருந்த இடத்தில இப்பிடி ஒவ்வொருநாளும் ஆயிரக்கணக்கில உழைக்கிறதெண்டால் சும்மாவோ?

இவர் மாதிரி ஊருக்கு ஒருத்தராவது இருக்கினம். இப்பிடியான ஆக்களாலதான் பவுஸர் கணக்கில பெற்றோல் வந்தும், வரிசைகள் குறையுதில்லை. மன்னாரில உள்ள பெற்றோல் செற் ஒண்டுக்கு வழக்கமா மாசத்துக்கு 4 பவுஸர் பெற்றோல் தான் வாறதாம். அப்பிடியிருந்தும் அடுத்தமாசமும் அந்தப் பெற்றோல் வித்துமுடியாமல் இருக்கிறதாம். இப்ப அந்த செற்றுக்கு ஒரு மாசத்தில 7 பவுஸர் பெற்றோல் வந்தும், வரிசை குறைஞ்சபாடில்லை. அப்பிடியெண்டால் என்ன அர்த்தம்? எங்கட சனம் தேவைக்கு அதிகமா வாங்கி பெற்றோலைச் சேர்த்து வைச்சிருக்கு. அதோட வெளியாக்களும் இப்பிடி பெற்றோல் செற்றுகளில போய் வரிசையைக் கூட்டுகினம். அதாலதான் பெற்றோல் வந்தவுடனேயே முடிஞ்சிடுது. இப்பிடியான கள்ளச் சந்தைக்காரரை கண்டுபிடிச்சு, அவைக்கு பெற்றோலை அடிக்காமல் விட்டாலே இப்ப நிக்கிற கியூ அரைவாசியாக் குறைஞ்சிடும் கண்டியளோ.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிபொருள் தட்டுப்பாட்டால்

# தன்னார்வத்தொண்டர்களின் சேவை தற்காலிகமாக நிறுத்தம்



**யாழ்ப்பாணம், ஜூன் 29**

**எரிபொருள் தட்டுப்பாட்டால் யாழ்.போதனா மருத்துவமனையில் கடமையாற்றும் தன்னார்வத்தொண்டர்களின் சேவை எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் தற்காலிகமாக இடைநிறுத்தப்படவுள்ளது என்று மருத்துவமனைப் பிரதிப்பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனானந்தா அறிவித்துள்ளார்.**

யாழ்.போதனா மருத்துவமனையில் கடந்த 3 மாதங்களுக்கு மேலாக சுயவிருப்பில் தன்னார்வத் தொண்டர்களாக 275 பேர் கடமையாற்றுகின்றனர். பொருளாதாரப் பேரிடர் காலத்தில் தன்னார்வத்தொண்டர்களின் பணி எமது மருத்துவமனைக்கு மிகவும் கைகொடுத்தது. ஆனால் தற்போதைய எரிபொருள் நெருக்கடியில் ஏற்பட்ட போக்குவரத்து சிரமங்களால் அவர்களின் பணி தற்காலிகமாக இடைநிறுத்தப்படவுள்ளது என்று தெரிவித்துள்ளார். மேலும் இதனால் சிகிச்சை வழங்குதலில் ஏற்படும் சிரமங்களுக்கு பொது மக்களிடம் மன்னிப்புக் கோருவதாகவும் மருத்துவர் சி.யமுனானந்தா தெரிவித்துள்ளார். (ஒ-14)

## கொள்கலன்களுக்கு எரிபொருள் இல்லாததால் தீவக மக்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 29

கொள்கலன்களுக்கு எரிபொருள் வழங்கக்கூடாது என அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டதால் தீவகப் பகுதியில் உள்ள மக்கள் எரிபொருள் பெறுவதில் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

வாகனங்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருள் விநியோகிக்கப்படுகின்றது. தீவகப் பகுதிகளில் உள்ளவர்கள் கடந்த காலங்களில் கொள்கலன்களில் எரிபொருள் பெற்றனர். தற்போதைய எரிபொருள் நெருக்கடியில் கொள்கலன்களில் எரிபொருள் நிரப்ப அனுமதி வழங்கப்படவில்லை.

எரிபொருள் நிலையங்களில் எப்போது எரிபொருள் வழங்கப்படுகின்றது எனத் தெரியாத நிலையில் படகுகளில் தமது வாகனங்களை ஏற்றிக்கொண்டு சென்று எரிபொருள் பெற முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட வாகன சாரதிகள் பலர் வாகனம் செலுத்துவதை நிறுத்திக் கூலி வேலைக்குச் செல்கின்றனர்.

இதேவேளை நயினாதீவு நாகபூசணி அம்பாள் கோவில் வருடாந்த பெருந் திருவிழா இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில் திருவிழாவுக்கு வருவோரை அழைத்துச் செல்வதற்கு எரிபொருள் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது என ஓட்டோ சாரதிகள் தெரிவித்துள்ளனர். அத்துடன் படகுகளில் கொண்டு வரப்படும் பொருள்களை வீடுகளுக்குக் கொண்டு செல்ல வாகனங்களுக்கு எரிபொருள் இல்லை. மேலும் எரிபொருள் தட்டுப்பாட்டால் நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலயத்துக்குச் செல்லும் படகுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளனர். (ஒ-14-9)




## சாவ. மருத்துவமனை மின்பிறப்பாக்கி பழுது

### மின்தடையில் நோயாளர்கள் சிரமம்

சாவகச்சேரி, ஜூன் 29

சாவகச்சேரி மருத்துவமனையின் மின்பிறப்பாக்கி பழுதடைந்துள்ளதால் இரவு வேளையில் மின்தடை ஏற்படும் போது விடுதிகளில் தங்கியுள்ள நோயாளர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி மருத்துவமனையில் இரு மின்பிறப்பாக்கிகள் உள்ளன. எனினும் நீண்டகாலமாக ஒரு மின்பிறப்பாக்கி பழுதடைந்து காணப்படுகின்றது. மின்தடை ஏற்படும் வேளைகளில் மற்றைய மின்பிறப்பாக்கி பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது அதுவும் பழுதடைந்துள்ளதால் மின்தடை ஏற்படும் வேளைகளில் நோயாளர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (ஒ-14-9)

## எரிபொருள் வழங்குமாறு கோரி கிராம அலுவலர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர்கள் தமக்கு எரிபொருள் வழங்குமாறு கோரி கவனவீர்ப்புப் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

"கிராம அலுவலர்கள் அத்தியாவசிய அலுவலர்களா? அல்லது அநாவசிய அலுவலர்களா?", "எரிபொருள் விநியோகத்தில் கிராம அலுவலர்களை புறக்கணிக்காதீர்கள்", கொவிட் காலத்தில் அத்தியாவசிய அலுவலர்கள்; பொருளாதார நெருக்கடி காலத்தில்???" போன்ற பதாகைகள் ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த அலுவலர்கள் சுகவீன விடுப்புப் போராட்டத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஈடுபட்டனர். எனினும் தமக்கான தீர்வு கிடைக்காததால் அவர்கள் மீண்டும் நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன் தமக்கான தீர்வு கிடைக்கும் வரை தாம் பணியைத் தொடர மாட்டோம் எனவும் தெரிவித்தனர். (ஒ-14-26)



## எரிபொருள் தட்டுப்பாடு,

# மட்டுப்படுத்தப்பட்ட பஸ் சேவையால் பொதுமக்கள் நீண்ட நேரம் வீதியில்

சாவகச்சேரி, ஜூன் 29

எரிபொருள் தட்டுப்பாட்டால் பஸ் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் பஸ்ஸில் பயணிக்கும் பொதுமக்கள் நீண்ட நேரம் வீதியில் காத்திருக்கின்றனர்.

அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டும் எரிபொருள் வழங்கப்படுமென அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் தனியார் பஸ்கள் மட்டுப்படுத்தப்பட்டு சேவையில் ஈடுபடுகின்றன. அதேவேளை இ.போ.ச.சாலைகள் நேற்றுமுன்தினம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதால் இ.போ.ச. பஸ்களும் குறைவாகவே காணப்பட்டன. மட்டுப்படுத்தப்பட்ட பஸ் சேவையால் மாணவர்கள் மற்றும் அரச பணியாளர்கள், பொதுமக்கள் பலர் நீண்டநேரம் வீதியில் காத்திருந்தனர்.



## எரிபொருள் தட்டுப்பாடு

# மாவட்டச் செயலருடன் எம்.பி.க்கள் சந்திப்பு!

நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் எரிபொருள் பற்றாக்குறையை அடுத்து, யாழ்ப்பாணம் மாவட்டச் செயலருடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் நேற்றுக் கலந்துரையாடலை மேற்கொண்டுள்ளனர்.

பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கள்ளச்சந்தை வியாபாரம் விரவியுள்ளமை தொடர்பில் மாவட்டச் செயலருக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எரிபொருள் நிலையங்களில் நிலவும் பிரச்சினைகளை தீர்த்து, மக்கள் எரிபொருளை பெறுவதை இலகுபடுத்துவதற்காக இயன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் மாவட்டச் செயலரால் இதன்போது தெரிவிக்கப்பட்டது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாகத் தெரிவு

கொழும்பு, ஜூன் 29

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் 80 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் கடந்த 26 ஆம் திகதி சங்கரப் பிள்ளை மண்டபத்தில் இடம்பெற்றது. அதன்போது புதிய நிர்வாகத் தெரிவுகள் இடம்பெற்றன.

காப்பாளராக பேராசிரியர் எஸ்.தில்லைநாதன், துணைக்காப்பாளர்களாக கலாநிதி. திருச்சந்திரன்,பேராசிரியர் எம்.கருணாநிதி, வே.கந்தசாமி, கலாநிதி க.இரகுபரன், காசுபதி, நடராஜா ஆகியோரும் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை உறுப்பினர்களாக சிரேஸ்ட சட்டத்தரணி கே.எஸ்.இரத்தினவேல், ஜனாதிபதி சட்டத்தரணி வி.புவிதரன், கணக்காளர் என்.பஞ்சாட்சரம், மருத்துவர் சிவபிரகாசம் அனுஷ்யந்தன், ஐயம்பிள்ளை இராசரத்தினம் ஆகியோரும் சங்கத்தின் தலைவராக சட்டத்தரணி நடராஜர் காண்டீபன், துணைத்தலைவர்களாக மா.கணபதிப்பிள்ளை, சட்டத்தரணி ஜெயந்தி விநோதன், மருத்துவர் தி.ஞானசேகரன், பொதுச் செயலாளராக மீண்டும் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி, உதவிச் செயலாளர் லீலாவதி மோகனசுந்தரம், நிதிச்செயலாளராக செல்லத்துரை திருச்செல்வன், உதவி நிதிச்செயலாளராக கோபாலபிள்ளை பரமானந்தன், நூலகக்குழுச் செயலாளராக குமரன், இலக்கியக்குழுச் செயலாளராக சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா, கல்விக்குழுச் செயலாளராக சண்முகம் இந்திரகுமார், நிலையமைப்புக்குழுச் செயலாளராக மா.தேவராசா, உறுப்புரிமைக்குழுச் செயலாளராக கி.பொன்னுத்துரை, நிர்வாகக்குழு உறுப்பினர்களாக கனகசபை சுந்தரேசன், சட்டத்தரணி ஜி.இராஜகுலேந்திரா, பவானி முகுந்தன், தெ.மதுசூதனன், கதிரவேலு மகாதேவா, அமிர்தநாயகம் நிக்சன், க.செந்தில்குமார், வளர்மதி சுமாதரன், செ.மனோகரன், மருத்துவர் உமாபதி ஸ்ரீசங்கர், ஆ.இரகுபதி பாலசிறீதரன், வேலுப்பிள்ளை இளஞ்செழியன், மிதிலைச்செல்வி, ஸ்ரீபத்மநாதன், சங்கரப்பிள்ளை பாலேஸ்வரன், உள்ளகக்கணக்காய்வாளர்கள் சி.மாணிக்கராசா, தி.ஜெயசீலன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (ஓ-14)

### வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாவிடின்

# மன்னிப்புக் கோராமல் உடன் பதவி விலகுக



**கொழும்பு, ஜூன் 29**

**மக்களின் தேவைகளை நிறைவேற்ற முடியாவிட்டால், அமைச்சர்களும் அதிகாரிகளும் ருவிற்றர் செய்திகள் மூலம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருக்காமல் உடனடியாகப் பதவி விலகவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒரு 'சூப்பர்' பிரதமரைக் கொண்டு வந்து நாட்டைக் கட்டியெழுப்ப அரசாங்கம் நடத்திய பொய் நாடகங்கள் அனைத்தும் தற்போது மக்களிடம் அம்பலமாகியுள்ளன. இவ்வாறானதொரு நிலை இருந்தும் அந்தந்த நேரத்தை சமாளிக்க பொய்களை கூறும் அரசாங்கத்தின் அமைச்சர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று எரிவாயு, எரிபொருள், பால் மா கேட்டு போலி நாடகத்தை ஆரம்பித்துள்ளார்கள். அதேபோல், 5 மாதங்களில், 10 மாதங்களில் நாட்டைக் கட்டியெழுப்புவோம் எனக் கூறும் போலியான ஏமாற்று விளையாட்டை நிறுத்தி, நாடு இழந்த நன்மதிப்பை மீட்டெடுக்க மக்கள் அபிப்பிராயங்களுக்குச் செவி சாய்த்து பதவி விலக வேண்டும் - என்றார். (ம)

# தொல்பொருள் சின்னங்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை

### வடக்கு சுற்றுலாப் பணியகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 29

வடமாகாணத்தின் தொல்பொருள் சின்னங்களைப் பாதுகாப்பதற்கு இனிவரும் காலங்களின் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று வடமாகாண சுற்றுலா பணியகத்தின் பணிப்பாளர் சுனில் திசா நாயக்க தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் பிரதான கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது, 'வட மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இராசதானி காலத்திற்குரியதான தொல்பொருள் சின்னங்கள் காணப்படுகின்றன. குறித்த தொல்லியல் மரபுரிமைகளை பாதுகாத்து சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதில் வடமாகாணத்தின் சுற்றுலாப் பணியகத்தின் பங்கு குறைவாகவே காணப்படுகின்றது. தொடர்ச்சியாக இவ்வாறான நிலையிலேயே காணப்படுமா? என்று ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதில் வழங்குகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சில விடயத்துக்கு பொறுப்பான திணைக்களங்களிடம் நாங்கள் சில கோரிக்கைகளை முன் வைத்திருந்தோம். எமக்கு அது சாதகமாக அமையவில்லை. இருப்பினும் எதிர்காலத்தில் குறித்த தொல்பொருள் சின்னங்கள் தொடர்பில் எம்மால் ஆற்றப்பட வேண்டிய கடமைகள் ஆற்றப்படும் - என்றார். (ம-125)



# ஜனாதிபதி கோத்தாபயவை பெயரளவு நிர்வாகியாக்குக

### விமல் வீரவன்ஸ கோரிக்கை

கொழும்பு, ஜூன் 29

ஜனாதிபதியை பெயரளவிலான நிர்வாகியாக்கி சர்வ கட்சி அரசாங்கத்தின் ஊடாகப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண சகல தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும். இலங்கையின் பொருளாதார நெருக்கடி பலம் வாய்ந்த நாடுகளின் ஆக்கிரமிப்புக்கு சாதகமாக அமையக்கூடாது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் மிக மோசமான முறையில் தீவிரமடைந்துள்ள எரிபொருள் நெருக்கடி நாட்டு மக்களை முழுமையாக வீதிக்கிறக்கியுள்ளது. பொருளாதார நெருக்கடி எவ்வகையில் தாக்கத்தை ஏற்படுத்தும், தாக்கங்களுக்கான தீர்வு என்னவென்பது தொடர்பில் கடந்த அரசாங்கத்திடம் பலமுறை யோசனைகளை முன்வைத்தோம். பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் எம்மை அலட்சியப்படுத்தும் நோக்கில் முன்வைத்த திட்டங்களைச் செயற்படுத்தவில்லை. அரசாங்கத்தின் தவறான செயற்பாடுகள் இன்று முழு நாட்டையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளன.

தீவிரமடைந்துள்ள நெருக்கடிக்கு பொதுவான அடிப்படையில் தீர்வு காணும் நோக்கம் அரசாங்கத்துக்குக் கிடையாது. தேசிய மட்டத்திலான நெருக்கடிகளை பிற நாட்டவர்களுக்கு சாதகமாக்கும் வகையில் அரசாங்கம் செயற்படுவது அவதானத்துக்குரியது. எரிபொருள் விநியோக கட்டமைப்பின் பொறுப்பை தனியார் நிறுவனங்களுக்குத் கையளிப்பது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என வலுசக்தி அமைச்சர் குறிப்பிட்டுள்ளமை பாரதூரமானது. எரிபொருள் விநியோகத்தில் இருந்து அரசாங்கம் முழுமையாக விலகினால் அது மாறுபட்ட பிரச்சினைகளை ஏற்படுத்தும் - என்றார். (ம)

## எரிபொருள் விநியோக நிலையங்களின் பட்டியலை வெளியிட்டது லங்கா ஐ.ஓ.சி.

கொழும்பு, ஜூன் 29

எரிபொருள் விநியோகம் செய்யப்படவுள்ள எரிபொருள் நிலையங்கள் தொடர்பான பட்டியலை லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

IOC Lanka IOC

அதன்படி திருகோணமலை முனையத்திலிருந்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை 116 எரிபொருள் நிலையங்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# வெளிநாட்டுப் பணிப்பெண்களின் குடும்பப் பின்னணி தேவையில்லை

### அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜூன் 29

பணிப்பெண்களாக வெளிநாடு செல்லும் பெண்களின் குடும்பப் பின்னணி தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற கட்டாய நிபந்தனையை நீக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

முன்னர் பணிப்பெண்களாக செல்வோர் தமக்கு 2 முதல் 5 வயதுக் குட்பட்ட பிள்ளைகள் இல்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காக இந்தக் குடும்பப் பின்னணி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தக் கட்டுப்பாடு பெண்களின் தொழில் உரிமையை பாதிக்கின்றது எனவும் இந்தக் குடும்பப் பின்னணி அறிக்கைகளால் பல பெண்கள் வெளிநாடு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது எனவும் மகளிர் அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

இதன்காரணமாக போலியான குடும்பப் பின்னணி அறிக்கையைச் சமர்ப்பித்து சிலர் வெளிநாடு செல்லும்போது பல பிரச்சினைகளை எதிர்கொள்வதாக தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் நேற்றுமுன்தினம் அமைச்சரவையில் அறிவித்தார்.

இந்த நிலையில் 2 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுகளையுடைய பிள்ளைகளை கொண்டிருக்கும் பெண்கள் வெளிநாடு செல்லும்போது குடும்பப் பின்னணி அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனையை நீக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியாருக்குச் சொந்தமான காணி அளவீட்டுக்கு எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 29

**காரைநகர் ஜே/45 கிராம அலுவலர் பிரிவில் உள்ள தனியாருக்குச் சொந்தமான 40 ஏக்கர் காணியை, கடற்படையினரின் தேவைகளுக்கு அளவிடுவதற்கு நேற்று எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.**

கடற்படையினருக்குக் காணியை அளவிடுவதற்கு நில அளவைத் திணைக்களத்தினர் குறித்த பகுதிக்கு நேற்று வருகை தந்தனர்.



இதன்போது கடற்படையினருக்கு காணி வழங்க முடியாது எனத் தெரிவித்து, நில அளவை திணைக்களத்துக்கு எழுத்து மூலமான ஆவணம் வழங்கப்பட்டது.

அதனையடுத்து நில அளவைத் திணைக்களம் அந்தப் பகுதியை விட்டுச் சென்றது.

இதேவேளை கடந்த 24 ஆம் திகதி ஜே/44 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட தனியாருக்குச் சொந்தமான காணியை அளப்பதற்கு நில அளவைத்திணைக்களம் வந்தது. அங்கு ஒன்றுகூடிய அரசியல் பிரமுகர்கள், சமூக மட்ட அமைப்புக்கள், பொதுமக்களால் காணி அளவீடு முறியடிக்கப்பட்டது.

தற்போதைய இக்கட்டான சூழ்நிலையில் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்ற வேளை நில அளவைத் திணைக்களத்தின் காணி அபகரிப்பு நடவடிக்கைகள் அனைவர் மத்தியிலும் விசனத்தை ஏற்படுத்துகின்றது என்று அந்தப் பகுதியினர் தெரிவித்துள்ளனர். (ஒ-14-27)

## மந்துவிலான்வெளி குளங்கள் புனரமைக்கப்படவில்லை

சாவகச்சேரி, ஜூன் 29

மந்துவில் மேற்கு மந்துவிலான்வெளியில் பெரிய மருதடி, சின்னமருதடி ஆகிய இடங்களில் உள்ள குளங்கள் நீண்ட காலமாக புனரமைக்கப்படவில்லை. இதனால் அந்தப் பகுதியில் உள்ள கால்நடைகள் தண்ணீருக்காக அலைந்து திரிகின்றன என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி குளங்கள் புனமைக்கப்படாததால் வற்றியுள்ளன என்றும் குளங்களைப் புனரமைக்குமாறு உரிய தரப்புகளைக் கோரி வருகின்ற போதிலும் அவை புனரமைக்கப்படவில்லை எனவும் மக்கள் தெரிவித்தனர். (ஒ-14-9)

## 50 விவசாயிகளுக்கு சிறுதானிய விதைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 29

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் சிறுப்பிட்டியில் 50 விவசாயிகளுக்கு குரக்கன், பயறு, காராமணி ஆகிய சிறுதானிய விதைகள் சிறுப்பிட்டி ஜனசக்தி சனசமூக நிலையத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வழங்கப்பட்டன.

பொருளாதார நெருக்கடி காரணமாக உரங்கள் மற்றும் எரிபொருளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் உணவுற்பத்தி மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதைக் கருத்திற்கொண்டு சிறுதானியச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் "இராசதானியம்" என்ற திட்டத்தைக் கடந்த மாதம் முதல் முன்னெடுத்து வருகின்றது.

இதன் ஒரு கட்டமாகவே விவசாயிகளுக்கு சிறுதானிய விதைகள் வழங்கப்பட்டன.

இதன்போது தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், ஓய்வுநிலைப் பிரதி விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஒ-14)





## போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு

யாழ்ப்பாணம், ஜூன் 29

போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ்.மாவட்டச் செயலகத்தில் அண்மையில் இழப்பீடு வழங்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ச அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு பயணம் மேற்கொண்டிருந்தார்.

அதன் ஒரு பகுதி நிகழ்வாகவே கடந்த காலப் போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டது.

அதற்கமைய பொதுச்சொத்து , அரச சொத்து , மரணமடைந்தோர் மற்றும் காயமடைந்தோர், சேதமடைந்த மத வழிபாட்டுத் தலங்கள் ஆகியவற்றுக்கான இழப்பீடுகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் யாழ்.மாவட்டச்செயலர் கணபதிப்பிள்ளை மகேசன், நீதி அமைச்சின் மேலதிக செயலாளர் ஆர்.பீ. எஸ்.சமன்குமாரி, இழப்பீட்டு அலுவலகத்தின் பணிப்பாளர் நசீமா அஹம்மட் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஒ-14)

## புத்தளத்தில் வெடிபொருள் மீட்பு சந்தேக நபர்களுக்குப் பிணை!

கொழும்பு, ஜூன் 29

புத்தளம் வண்ணாத்தவில்லு லெக்டோ தோட்டத்தில் வெடிபொருள்கள் மீட்கப்பட்டதையடுத்து கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஆறுபேரில் நால்வருக்கு சுமார் மூன்று வருடங்களின் பின்னர் நேற்றையதினம் பிணை வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான வழக்கு விசாரணைகள் புத்தளம் மேல் நீதிமன்றில் மூவரடங்கிய நீதிபதிகள் முன்னிலையில் இடம்பெற்று வந்த நிலையில் நேற்றைய தினம் அவர்களுக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய இருவரும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ம)

## சிறுமிக்கு பாலியல் சீண்டல் குடும்பத்தலைவருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜூன் 29

6 வயது சிறுமியை பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட குடும்பத்தலைவரை விளக்கமறியலில் வைக்க மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

இளவாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரான்பற்று பகுதியில் இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. சம்பவத்தையடுத்து சிறுமிக்கு ஏற்பட்ட மன உளைச்சலையடுத்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டது.

சிறுமி வழங்கிய தகவலின் அடிப்படையில் அவரது தந்தையின் நண்பரான அயல் வீட்டைச் சேர்ந்த 45 வயதுடைய குடும்பத்தலைவர் ஒருவர் இளவாலைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (ம-26)

# மாணவர்களின் கல்விக்கு சாரதியாக மாறிய அதிபர்

நாட்டின் எரிபொருள் நெருக்கடியால் பாடசாலைக்கு வருகை தரும் மாணவர்களின் சிரமங்களைக் கருத்திற்கொண்டு பாடசாலை அதிபர் ஒருவர் சாரதியாக களமிறங்கியுள்ளார்.

மெதிரிகிரியவிலுள்ள சிறிமாவோ பண்டாரநாயக்க ஆரம்பப் பாடசாலையின் அதிபர் ஜே.கே.சமிந்த பிரியஷாந்த என்பவரே இந்தப் பணியில் இறங்கியுள்ளார்.

எரிபொருள் நெருக்கடியால் பாடசாலைகள் மூடப்படுகின்ற நிலையில் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டை தொடர்ந்து முன்னெடுக்க அவர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

காலை 8 மணிக்கு 3 முறை பேருந்து சேவையை செயற்படுத்தி பின் பாடசாலை முடிவடையும் வேளை பிற்பகல் 2.30 மணிக்குள்ளும் பேருந்து சேவையை நடத்தி மீண்டும் மாணவர்களையும் வீடுகளுக்குக் கொண்டு சென்று விடுகின்றார்.

இதன்போது பாடசாலைப் பேருந்துக்குத் தேவையான எரிபொருளைப் பெற்றோரும் தந்துதவுகின்றனர் என அதிபர் தெரிவித்துள்ளார்.

பெற்றோர் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அழைத்து வருவதில் உள்ள சிரமங்கள் குறித்து பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தில் முறையிடப்பட்டதையடுத்து அதிபர் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## உயிர்க்கூட்டின் ஊசலாட்டம்!

எரிபொருளின் இருப்பு முற்றாகத் தீர்ந்ததை அடுத்து, ஜூலை மாதம் 10 ஆம் திகதிவரை 'அறிவிக்கப்படாத' பொதுமுடக்கம் ஒன்றுக்குச் சென்றிருக்கின்றது இலங்கை. அத்தியாவசியப் பொருள்கள் தவிர்ந்த இதர விடயங்களுக்கு எரிபொருள் இல்லை என்று வெட்கமேயில்லாமல் தன் தோல்வியை ஒப்புக்கொண்டு, அறிவித்திருக்கின்றது அரசாங்கம். ஆனால், இந்த வங்குரோத்து நிலை ஜூலை 10 ஆம் திகதியுடன் முற்றுப்பெறுமா அல்லது தொடர்கதையா என்பதுதான் இங்கு மக்களின் மனங்களில் எழும் ஒற்றைக் கேள்வி.

ஜனாதிபதி உள்ளிட்ட அரச உயர்மட்டங்களின் வினைத்திறனற்ற போக்கு, நாட்டின் உள்ளும் புறமும் ஏற்பட்டுள்ள பணப்பரிவர்த்தனைத் தேக்கம், டொலரை ஈட்டுவதற்கான வழிவகைகள் இல்லாத கையறு நிலைமை என்று அனைத்தையும் ஒரே நேர்கோட்டில் வைத்துப் பார்த்தால் இந்த 'அறிவிக்கப்படாத' பொதுமுடக்கத்துக்கான முற்றுப்புள்ளி கண்களுக்கு எட்டிய தூரத்தில் இல்லை என்பது தெளிவு.

தட்டுப்பாடு இருந்தாலும் கூட, ஏதோ கொஞ்சநஞ்சமேனும் எரிபொருள்கள் கிடைத்துக் கொண்டிருந்த காலத்திலேயே விலையேற்றங்கள் – போக்குவரத்து நெருக்கடி – வரிசைகள் என்று சொல்லொணாத் துன்பங்களை மக்கள் அனுபவித்துக் கொண்டிருந்தனர். இப்போது அத்தியாவசியத் தேவைகள் தவிர்ந்த இதர விடயங்களுக்கு எரிபொருள்கள் இல்லை என்று திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில் ஏற்கனவே இருந்த நெருக்கடிகள் இன்னுமின்னும் அதிகரிக்கவே செய்யும். உண்மையில் பஞ்சத்துக்கும் பட்டினிச்சாவுக்குமான கலியுகத்துக்கு அத்திபாரம் இப்போதுதான் போடப்பட்டிருக்கின்றது. ஒரு மலைப்பாம்பு தனக்கான இரையை மெல்ல மெல்ல ஆக்கிரமித்து விழுங்குவதுபோல அப்பாவிப் பொதுமக்களை இந்த நெருக்கடிகள் இனி கொஞ்சம் கொஞ்சமாக விழுங்கத்தான் போகின்றன.

ஆனால், இந்த நெருக்கடிகளுக்கெல்லாம் அரசாங்கத்திடம் தீர்வைத் தேடினால் அது எமது முட்டாள்தனமன்றி வேறில்லை. நாடு மீட்சியடையக்கூடிய ஏதுநிலை இருந்தபோதே அரசாங்கத்தாலோ, அதிகாரிகளாலோ எந்த வினைத்திறனான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியவில்லை. இப்படியிருக்கையில் முற்றாக மூழ்கிவிட்ட இந்தத் தீவை இதிலிருந்து எவ்வாறுதான் மீட்க முடியும்? தற்போது எம்மை நாமே தற்காத்துக் கொள்ள வேண்டிய கட்டாய நிலைக்குள் 'இலங்கையர்களான' நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம். எம் கூட்டுச் செயற்பாடுகள் மூலமும், வியூகங்கள் மூலமும் எமது இருப்பை நாம் உறுதிப்படுத்த வேண்டிய தவிர்க்க முடியாத காலமிது.


நிர்வாக முடக்கத்தால் நாட்டின் அத்தனை துறைகளும் பாதிப்புக்குள் தள்ளப்பட்டாலும் சுகாதாரத்துறைக்கு ஏற்படப்போகும் பாதிப்பு சொல்லிமாளாதது. உரிய நேரத்தில் உரிய மருத்துவ உதவி கிட்டாமல் ஓர் உயிர் தன் வாழ்வை முடித்துக்கொள்ளும் அவலநிலை நிச்சயம் நேரத்தான் போகின்றது. அவசர மருத்துவ இடர்பாட்டுக்கு நோயாளர் காவுவண்டிகள் வரும்தான். ஆனால், அது எவ்வளவு காலம்? உரிய நேரத்துக்கு இந்த மருத்துவ உதவி கிட்டுமா? என்றும் சிந்திக்க வேண்டியிருக்கின்றது.

ஒரு கிராம அலுவலர் பிரிவில் ஒரு வாகனத்தை அந்தந்த கிராம மக்களின் மருத்துவ அவசர இடர்பாட்டுக்கென ஒதுக்குவதன் மூலமும் அந்த வாகனத்துக்குத் தேவையான எரிபொருளை உரிய எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளருடனும் உயர் மட்டங்களுடனும் பொது அமைப்புக்களின் தலையீட்டுடன் பெற்றுக்கொள்வதன் மூலமும் இந்த இடர்பாட்டை கொஞ்சமாவது சமாளிக்க முடியும். எமது வீட்டுக்கதவைத் தட்டும் வரையில் இழப்பின் வலி எமக்குத் தெரியாது. ஆனால், அந்த வலியை உணர்ந்து அதை எமது கிராமங்களில் ஏற்படாமல் தவிர்ப்பது இளைஞர் கழகங்களினதும், இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களதும், விளையாட்டுக் கழகங்களினதும் பொறுப்பாகும்.

இது விமர்சித்துக்கொண்டிருக்க வேண்டிய காலமல்ல. மாற்று நடவடிக்கைகளையும் நகர்வுகளையும் போர்க்கால அடிப்படையில் தீர்மானிக்க – செயற்பட வேண்டிய காலம். அரசாங்கத்தை நம்பிப் பயனில்லை. செயற்படுவோம்.

### நாளொரு நல்வார்த்தை

"நாளைக்கு தள்ளி போடும் வேலைகளை மட்டும் தள்ளிப் போடுங்கள். இன்றைக்குச் செய்யவேண்டிய வேலைகளை இன்றே செய்து முடியுங்கள்" - **ஒஸ்கார் வைல்ட்**



# இலங்கையின் உணவுநெருக்கடி ஜி–7 மாநாட்டில் எதிரொலித்தது!

**கொழும்பு, ஜூன் 29**

**ஜேர்மனியில் இடம்பெற்றுவரும் ஜி-7 உச்சிமாநாட்டில், இலங்கையின் உணவு நெருக்கடி தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ளார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி.**



அபிவிருத்தி அடைந்த நாடுகளின் கூட்டு மாநாடான ஜி-7 மாநாடு ஜேர்மனியில் இடம்பெற்று வருகின்றது. இந்த மாநாட்டில் ஜேர்மனியின் சிறப்பு அழைப்பின் பேரில் மோடி கலந்து கொண்டுள்ளார். அங்கு உரையாற்றுகையிலேயே, இந்தியா இலங்கையின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். (ம)

### இந்தியாவின்

# பெற்றோலிய அமைச்சருடன் மிலிந்த மொரகொட பேச்சு!

கொழும்பு, ஜூன் 29



இலங்கையின் அவசர எரிபொருள் தேவைகள் குறித்து, இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட இந்தியாவின் பெற்றோலிய விவகார அமைச்சர் ஹர்தீப் சிங் பூரியுடன் அவசர பேச்சுக்களை மேற்கொண்டுள்ளார்.

இலங்கையின் எரிபொருள் கையிருப்பு கிட்டத்தட்ட முடிவுறும் நிலையில் உள்ளது. அத்தியாவசியத் தேவைகளுக்கு மாத்திரமே எரிபொருள் வழங்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ள நிலையிலேயே இந்தியப் பெற்றோலிய அமைச்சரை இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

கடனுதவி மூலம் எரிபொருள்களை பெற்றுக்கொள்வதற்காக இந்தியா வழங்கிய உதவிக்காக நன்றி தெரிவித்துள்ள மிலிந்த மொராகொட, தற்போது இலங்கைக்கு தேவையாக உள்ள பெற்றோல் மற்றும் டீசலை அவசர அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து இந்திய அமைச்சருடன் பேச்சுக்களை முன்னெடுத்துள்ளார். (ம)

**நாளை** **30.06.2022** **வியாழக்கிழமை** **ஆனி 16**

சுபநேரம் : 07.26 – 08.56
ராகுகாலம்: 01.26 – 02.56

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



















எரிபொருள் தாங்கிய கப்பல் இலங்கைக்கு வருவதில் மேலும் தாமதம். வரும் நாள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

அண்டைக்கு காலைல அஞ்சு மணி இருக்கும் கோழி கொக்கரக்கோ எண்டு....

# சஜித் முடிந்தால் செய்துகாட்டட்டும்

## *நான் பதவியைத் துறப்பேன் ஹறின் சவால்*

கொழும்பு, ஜூன் 29

மூன்று நாடுகளிடமிருந்து சஜித் எரிபொருளைக் கொள்வனவு செய்தால் எனது அமைச்சுப் பதவியைத் துறப்பேன் என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

"மூன்று நாடுகளிலிருந்து தன்னால் எரிபொருள் கொள்வனவு செய்ய முடியும்" என எதிர்க்கட்சித் தலைவர் அண்மையில் அறிவித்திருந்தார்.

நெருக்கடியான இந்தச் சூழ்நிலையில் எதிர்க்கட்சி வாய்ச் சவடால்களை வீசி அரசியல் நடத்துகின்றது.

நாட்டு நலன்கருதி அவர் இவ்வாறு எரிபொருளைக் கொள்வனவு செய்தால் எனது பதவியைத் துறக்க நான் தயார் - என ஹரின் சவால் விடுத்துள்ளார். (ச-இ)

# 10 நாள்களுக்குள் 4,000 கோடி ரூபா

## அச்சிட்டுக் குவித்தது மத்திய வங்கி



கொழும்பு, ஜூன் 29

மத்திய வங்கி கடந்த 10 நாள்களுக்குள் 4 ஆயிரம் கோடி ரூபா பணத்தை அச்சிட்டுள்ளது. இவ்வாறு பணத்தை அச்சிடுவதால் நாட்டில் பணவீக்கம் மேலும் மேலும் அதிகரிக்குமே தவிர குறைவடையாது. நாட்டின் உண்மையான பிரச்சினைகளை அரசாங்கம் இன்னும் புரிந்துகொள்ளவில்லை என்பது இதன் மூலம் தெளிவாகிறது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் 27ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஜனவரி முதல் இம்மாதம் வரை ஒவ்வொரு மாதமும் அரசாங்கம் எரிபொருள்களின் விலைகளை தொடர்ந்தும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. மார்ச் மாதத்தில் மாத்திரமே எரிபொருள் விலை அதிகரிக்கப்படவில்லை. பணவீக்கம் அதிகமாகவுள்ள நாடுகள் பட்டியலில் இலங்கை இரண்டாவது இடத்திலுள்ளது. எரிபொருள்களின் விலைகள் தொடர்ந்தும் அதிகரிக்கப்பட்டாலும், எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் மூடப்பட்ட நிலையிலேயே உள்ளன. எந்த முறைமையைப் பின்பற்றினாலும், வழங்குவதற்கு எரிபொருள் இல்லை என்பதே உண்மையாகும். அத்தோடு பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் எரிபொருள் நிரப்பும் நிலையங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்யத் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எரிபொருள் நெருக்கடிக்கான தீர்வு இதுவல்ல. இந்தத் தீர்மானத்தை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம்.

இவ்வாறான செயற்பாடுகளின் ஊடாக இந்த அரசாங்கம் இன்னும் உண்மையான பிரச்சினையை உணரவில்லை என்பது தெளிவாகிறது. அரசமைப்புத் திருத்த விவகாரத்திலும் அரசாங்கம் மந்த போக்குடனேயே செயற்படுகிறது. இவ்வாறான நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இவ்வாரம் முதல் ஐக்கிய மக்கள் சக்தி ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கவுள்ளது - என்றார். (ம)

# ரயில் சேவைகளில் ஏன் பாரபட்சங்கள்?

**ஆசிரியருக்கான கடிதம்**

கொரோனாத் தொற்றுக் காரணமாக இடைநிறுத்தப்பட்ட புகையிரத சேவைகள் தற்போது நாடுமுழுவதும் வழமைக்குக் கொண்டு வரப்பட்ட போதிலும், யாழ்ப்பாணம்- கொழும்பு இடையிலான மாலை நேர ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் பல்கலைக்கழக மாணவர்கள், அவசர கடமைகள் நிமித்தம் கொழும்பு சென்றுவர உள்ளோர் மிகவும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். பஸ் கட்டணங்கள் அதிகரித்த நிலையில், பலரும் ரயில் சேவையை எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்றனர். அத்துடன், பதுளை, மாத்தறை, கண்டி போன்ற இடங்களுக்கு இரவு நேர ரயில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றபோதிலும், வடமாகாணம் மட்டும் தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்படுவது வேதனைக்கு உரியது.

இது பற்றி வடமாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களோ, அரசியல்வாதிகளோ, போக்குவரத்து அமைச்சிடம் கூறி உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியமை கண்டிக்கத்தக்கது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து பொதுமக்களின் சிரமங்களைக் குறைக்க முன்வர வேண்டும் என்று வடமாகாண மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

**பொ.கணேஸ்வரலிங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** நினைத்ததை நடத்தி முடிப்பீர்கள். அரசு வழியிலான முயற்சிகள் ஆதாயமாகும். இழுபறியாக இருந்த செயல் ஒன்று நிறைவேறும். எதிர்பார்த்தவற்றில் நன்மை உண்டு. புதிய முயற்சி லாபமாகும்.

**இடபம்:** கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. புதிய நபரிடம் எச்சரிக்கை அவசியம். பணியிடத்தில் உங்களது செல்வாக்கு உயரும். பிறரிடம் பாராட்டு வாங்குவீர்கள்.

**மிதுனம்:** மனக்குழப்பம் அதிகரிக்கும். எந்த ஒன்றிலும் ஒரு முடிவுக்கு வர முடியாமல் போகும். வேலைப்பளு கூடும். நினைப்பதை நிறைவேற்ற முடியாமல் போகும்.

**கடகம்:** வரவை விட செலவுகள் அதிகரிக்கும். உங்கள் செயல்களில் கவனம் தேவை. வெளியூர் பயணம் செல்வீர்கள். அலைச்சலும், செலவும் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் இன்று வேண்டாம்.

**சிம்மம்:** வராமல் இருந்த பணம் இன்று உங்கள் கைக்கு வரும். பொருளாதார நெருக்கடி தீரும். பிரியமானவரை சந்தித்து மகிழ்வீர். எதிர்பார்த்த ஆதாயம் வந்து சேரும். நிதிநிலை உயரும்.

**கன்னி:** உத்தியோகத்தில் இருந்த நெருக்கடிகள் விலகும். உங்கள் எண்ணம் நிறைவேறும். தொழிலை விரிவு செய்யும் முயற்சி பலிதமாகும். நினைத்ததை நிறைவேற்றுவீர்கள். உங்களின் செல்வாக்கு உயரும்.

**துலாம்:** நீண்ட நாளாக இருந்த பிரச்சினை தீரும். உங்களது செயல்களில் தெளிவு உண்டாகும். யோசித்து செயற்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். தடைகள் விலகும். பெரியோரின் ஆலோசனை பயன் தரும்.

**விருச்சிகம்:** சில சங்கடங்களை சந்திப்பீர்கள். விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டிய நாள். வாகனப் பயணத்தில் கவனம் தேவை. எதிர்பாராத சங்கடங்களை இன்று சந்திக்க நேரும். உங்கள் முயற்சிக்கு பயன் உண்டு.

**தனுசு:** மனம் மகிழும்படியான சம்பவங்கள் நடைபெறும். நீண்ட நாள் எண்ணம் நிறைவேறும். நண்பரின் உதவியுடன் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். மகிழ்ச்சியான நாள். எதிர்பார்ப்புகள் எளிதாக நிறைவேறும்.

**மகரம்:** எதிர்ப்புகள் அகலும். சுறுசுறுப்பாகச் செயற்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். தடைபட்ட செயல்களை இன்று முடிப்பீர்கள். எதிர்பார்த்த செய்தி வரும்.

**கும்பம்:** உறவினர்களின் ஆதரவுடன் உங்கள் முயற்சியில் வெற்றி அடைவீர்கள். நிறைவேறாமல் இருந்த ஒரு முயற்சி இன்று நிறைவேறும். நிதிநிலை உயரும். வழக்குகள் உங்களுக்கு சாதகமாகும்.

**மீனம்:** நிதானித்து செயற்பட வேண்டிய நாள். செயல்களில் கவனம் செலுத்த வேண்டும். பணியிடத்தில் பதற்றம் அதிகரிக்கும். நண்பரின் ஆதரவு உங்கள் சங்கடத்தை அகற்றும். செயல்களில் கவனம் தேவை.

# குளிர் காலத்துக்குள் போரை நிறுத்துங்கள்

## ஜி-7 நாடுகளிடம் ஷெலன்ஸ்கி கோரிக்கை



**கீவ், ஜூன் 29**

**குளிர் காலத்துக்குள் போர் நிறுத்தத்தை மேற்கொள்ளும் வகையில் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று ஜி-7 நாடுகளிடம் உக்ரைனின் அதிபர் ஷெலன்ஸ்கி கோரிக்கை விடுத்துள்ளார்.**

ஜி-7 நாடுகளின் அமர்வு ஜேர்மனியில் நடைபெற்று வருகின்றது. இந்த அமர்வில் நேற்றுமுன்தினம் காணொலி வழியாக ஷெலன்ஸ்கி கலந்துகொண்டு உரையாற்றினார். இதன்போதே அவர் இவ்வாறு கோரிக்கையை முன்வைத்தார்.

உக்ரைனின் வெளிவிவகார அமைச்சர் குலேபாவும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டார். ஜி-7 மாநாட்டில், ரஷ்யா மீது அதிகமான பொருளாதார தடைகள் விதிக்கவேண்டும். உக்ரைனுக்கு அதிக ஆயுதங்கள் அளிக்க வேண்டும். ரஷ்யாவின் ஏகாதிபத்தியம் தோற்கடிக்கப்பட வேண்டும் என குலேபா உரையாற்றினார். ஜி-7 மாநாடு தொடங்கிய அன்றைய தினம் (கடந்த ஞாயிற்றுக்கிழமை) உக்ரைன் மீது ரஷ்யா கடும் ஏவுகணைத் தாக்குதலை நடத்தியதுடன், கிழக்கு உக்ரைனின் கேந்திரம் என்று சொல்லப்படும் செவரோடோனெட்ஸ்க் நகரத்தை முற்றுமுழுதுமாகக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (ம)

# ‘பிரிக்ஸ்’ கூட்டமைப்பில் சேர ஈரான் விண்ணப்பம்



தெஹ்ரான், ஜூன் 29

‘பிரிக்ஸ்’ நாடுகள் கூட்டமைப்பில் சேர்வதற்கு ஈரான் விண்ணப்பித்துள்ளது.

பிரேஸில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா ஆகிய 5 நாடுகள் இணைந்து ‘பிரிக்ஸ்’ என்ற கூட்டமைப்பை உருவாக்கியுள்ளன.

பிரிக்ஸ் கூட்டமைப்பின் 14ஆவது கூட்டம் சீனாவில் கடந்த 23ஆம் 24ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இதில் அல்ஜீரியா, ஆர்ஜெண்டினா, கம்போடியா, எகிப்து, எதியோப்பியா, பிஜி, இந்தோனேசியா, ஈரான், கஜகஸ்தான், மலேசியா, செனகல், தாய்லாந்து, உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகள் பங்கேற்றன.

இந்த நிலையில், ‘பிரிக்ஸ்’ நாடுகள் கூட்டமைப்பில் சேர ஈரான் விண்ணப்பித்துள்ளது. இந்த விண்ணப்பத்தை பிரிக்ஸ் நாடுகள் ஏற்கும்பட்சத்தில் இந்தக் கூட்டமைப்பில் 6வது நாடாக ஈரான் இணையும். அத்துடன் இந்த கூட்டமைப்பில் இணையும் முதல் வளைகுடா நாடு அது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# மின்சார நெருக்கடி இருளில் ஜப்பான்!

டோக்கியோ, ஜூன் 29

கடும் மின்சார நெருக்கடியால் டோக்கியோ மற்றும் அதனைச் சுற்றியிருக்கும் பகுதிகளில் உள்ள 3 கோடியே 7 லட்சம் மக்களை மின்விளக்குப் பாவனையைக் குறைக்குமாறு ஜப்பான் அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஜப்பானில் மழைக்காலம் முடிந்து கோடைக்காலம் ஆரம்பமாகியுள்ளது. அங்கு இதுவரை இல்லாத அளவு 35 டிகிரி செல்சியஸ்க்கும் அதிகமான வெப்பநிலை பதிவாகியுள்ளது.

இதனால் அங்கு மின்சாரப் பயன்பாடு அதிகரித்துள்ளது. அத்துடன் அண்மையில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக நாட்டின் அணுமின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடும் மின்சார நெருக்கடியைச் சந்தித்துள்ள ஜப்பான், நாட்டு மக்கள் மின்சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என அறிவித்துள்ளது. (ச-இ)

# அமெ.கருக்கலைப்பு தடைச்சட்டம் பெண்களுக்கு ஆதரவாக ‘கூகுள்’




வொஷிங்டன், ஜூன் 29

அமெரிக்காவில் பரபரப்பை ஏற்படுத்திய கருக்கலைப்பு தடை உத்தரவையடுத்து கூகுள் நிறுவனம் அமெரிக்காவில் உள்ள பெண் ஊழியர்கள் கருக்கலைப்பு செய்ய விருப்பினால் எந்தவித காரணமும் தெரிவிக்காமல் தங்களது பணியிடத்தை மாற்றிக்கொள்ள விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவித்துள்ளது. அமெரிக்காவில் கருக்கலைப்புச் செய்வதற்கு தடைவிதித்து அந்த நாட்டின் உச்சநீதிமன்றம் அண்மையில் உத்தரவு பிறப்பித்தது.

இந்த உத்தரவுக்கு அமெரிக்காவில் பல தரப்பினரும் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் அமெரிக்காவில் உள்ள முக்கியமான நிறுவனமான ‘கூகுள்’ தங்கள் நிறுவனத்தில் பணிபுரியும் பெண் ஊழியர்கள் வேறு இடங்களுக்கு இடமாற்றம் பெறுவதற்கு எந்தவித காரணமும் இன்றி விண்ணப்பிக்கலாம் என அறிவித்துள்ளது. அத்துடன் அவர்களின் ஆரோக்கியம், நீண்டகால வாழ்க்கை மற்றும் பணிகள் குறித்து அக்கறை கொண்டுள்ளோம் எனவும் தெரிவித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டெய்னரில் இருந்து 46 பேரின் சடலம் மீட்பு

## அமெரிக்காவில் பரபரப்பு

வொஷிங்டன், ஜூன் 29

அமெரிக்காவில் கண்டெய்னர் வாகனமொன்றினுள் இருந்து 46 பேர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் அங்கு பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணம் சாண்டியாகோவின் புறநகர் பகுதியில் ரயில் தண்டவாளம் அருகே நேற்றுமுன்தினம் சந்தேகத்துக்க இடமாக கண்டெய்னர் லொறி நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. சம்பவ இடத்துக்கு விரைந்த அந்தநாட்டுப் பொலிஸார் கண்டெய்னர் லொறியை சோதனையிட்டபோது அதற்குள் 50 க்கும் மேற்பட்டோர் மயங்கிய நிலையில் காணப்பட்டனர். உடனடியாக அவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த நிலையில் அதில் 46 பேர் ஏற்கனவே உயிரிழந்து விட்டனர் என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இவர்கள் மெக்ஸிக்கோவிலிருந்து சட்டவிரோதமாக அமெரிக்காவுக்குள் நுழையும் நோக்கத்துடன் வந்த அகதிகள் என்றும் கடுமையான வெப்பம், மூச்சுத்திணறல் உள்ளிட்ட காரணங்களால் கண்டெய்னரில் உயிரிழந்துள்ளனர் எனவும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. மெக்ஸிக்கோ உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இருந்து அமெரிக்காவுக்கு சட்டவிரோதமாக நுழையும் முயற்சியில் பலர் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# நல்லன நல்கும் நயினை நாகபூஷணிக்கு இன்று கொடியேற்றம்

நயினை நா.க.குமாரசூரியர்





ஈழமணித் திருநாட்டின் சிகரமென அமைந்துள்ளது யாழ்ப்பாணப் பட்டினமாகும். முழு உலகமும் போற்றுகின்ற பல வளங்களைக் கொண்டதும் இந்தப் பட்டினமாகும். சைவமும் தமிழும் தழைத்தோங்கும் பாரம்பரிய கலாசாரச் சிறப்புக்க ளைக் கொண்டது இந்தப் பட்டினமும் அதனோடிணைந்த தீவகங்களுமாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்மேற்குப் பகுதியைச் சூழ்ந்துள்ள ஏழு தீவகங்களில் நடுநாயகமாக அமைந்துள்ள ஒரு சிறிய அழகிய தீவே நயினாதீவாகும்.

நயினாதீவு அளவில் சிறியதெனினும் தொல்புகழால் தொன்மையான தீவாக விளங்குகின்றது. சரித்திர காலத்துக்கு முன்தொட்டே பல சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டுவந்த பெரும் புகழுடையது நயினாதீவு. சக்திபீடங்கள் அறுபத்து நான்கினுள் இது ஒன்றே இலங்கையில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. அகில உலகமெல்லாம் நிறைந்து நின்று உயிர்கள் எல்லாம் உய்யும் வண்ணம் அருள் சுரந்து காப்பவள் அன்னை. அன்னைக்கான வழிபாடுதான் சக்திவழிபாடு. இந்தச் சக்தி வழிபாடு மிகவும் பழைமைவாய்ந்தது. அன்னை பராசக்திதான் சக்திகளுக்கெல்லாம் ஊற்றாக விளங்குகின்றாள்.

காசியில் விசாலாட்சியாகவும், காஞ்சியில் காமாட்சியாகவும், மதுரையில் மீனாட்சியாகவும் பல திருநாமங்களைக் கொண்ட சக்தியானவள் நயினையில் புவனேஸ்வரியாகவும் வீற்றிருந்து அருளாட்சி செய்து வருகின்றாள்.

'மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாகத் தொழுவார்க்கு வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே' என்ற தாயுமானவர் கூற்றுக்கு அமைவாக இங்குள்ள தீர்த்தம் பாவங்கள் பலவற்றையும் தீர்க்கவல்லது என்பது சைவநன்மக்களின் அசையாத நம்பிக்கையாகும். தன்னை நாடி வரும் அடியார்களின் வேண்டுதல்களை ஏற்று அவர்களுக்கு வேண்டியதை வேண்டியாங்கு வழங்கும் அருள் உடையவள் அன்னை. அடியார்களின் கண்ணீரைக் காணிக்கையாக ஏற்று கருணை பாலிப்பவள் அன்னை. நாகபூஷணியாக, நாகராணியாக எழுந்தருளியிருந்து நாகதோஷத்தை நிவர்த்தி செய்து புத்திரபாக்கியத்தைக் கொடுத்து அருள்பாலித்துக் கொண்டு இருக்கின்றாள். அடியார்களின் துன்ப துயரங்களெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல மறைந்திட அருள்பாலிக்கின்றாள் அன்னை. ஆசைக் கடலில் அகப்பட்டு அலைமோதியோருக்கு வாசக் கமலங்களை தலைமேல் வைத்து அருள் நேசக்கரங்களை நீட்டி நிம்மதி தருகின்றாள். அழகுக்கொருவரும் ஒவ்வாத ஆனந்தவல்லியாக அன்பர் என்பவர்க்கு நல்லன எல்லாம் தருபவளாக அன்னை பராசக்தி அருளாட்சி நடத்துகின்றாள்.




**புராணங்களின் பறைசாற்றல்**

டச்சுக்காரர்களின் ஆட்சியின் பின்னர் இராமலிங்கர் இராமச்சந்திரர் என்பவரால் கி.பி. 1788ஆம் ஆண்டு நாகபூஷணி அம்மன் ஆலயத்தை கருங்கற்களால் கட்டியதாகவும் ஒவ்வொரு ஆண்டும் ஆனிமாதத்தில் திருவிழா நடைபெற்றதாகவும் திருவிழாக்காலங்களில் யாழ்ப்பாணத்திலிருந்து அம்பாளைத் தரிசிப்பதற்காக அடியார்கள் வருகை தருவதாகவும் சரித்திர ரீதியாக அறிய முடிகின்றது. நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம் மிகவும் பழைமைவாய்ந்தது என்பதை 'நாகம் வழிபட்ட நாயகி' என்னும் புராணக் கதைமூலம் அறியக்கூடியதாகவுள்ளது.

தூய்மையான நாகவழிபாட்டை இந்த ஆலயத்தில் காணலாம். புராதன காலம் தொட்டே நாகவழிபாடு இந்த ஆலயத்தில் நடைபெற்று வருகின்றது. இந்த ஆலயத்தைப் போன்று தொன்மையான நாகவழிபாட்டை வேறெங்கும் காணமுடியாது. முன்னதாக நாக வழிபாட்டிலே தோன்றி காலப்போக்கில் நாகபூஷணி வழிபாடாக வளர்ந்து நினைவுச்சின்னமாக நயினை நாகபூஷணி விளங்குகின்றாள். அடியார்கள் அம்பிகை மீது பற்றுவைத்து 'நாகசாந்தி' செய்வதற்கு நயினாதீவுக்கு வருகின்றார்கள்.

நாகசாந்தி செய்வதன்மூலம் நாகதோஷம் நீங்குகின்றது என்ற நம்பிக்கை அடியார்கள் மத்தியில் காணப்படுகின்றது. நாகதோஷத்தை நிவர்த்தி செய்து அம்பிகையின் அருளால் குழந்தை பாக்கியம் பெற்றவர்கள் பலர். தொன்று தொட்டு முழு நம்பிக்கையோடு அம்பிகையைத் தரிசித்து நற்பேறடைந்துள்ளார்கள் அடியார்கள்.

வல்லியாக விளங்குகின்ற நாகபூஷணி அம்பாள் ஐந்து தலைநாகத்தில் பவனி வருகின்ற காட்சி தேவலோகக் காட்சி, மஞ்சத்தில் எழுந்தருளி பவனி வருகின்ற காட்சி அடியார்களை மெய்சிலிர்க்க வைக்கின்றது. கைலாச வாகனத்தில் பவனி வருகின்ற காட்சியைக் காண கண்கள் கோடி வேண்டும். கண்ணீரைச் சொரிய வைக்கின்ற இந்த அற்புதமான காட்சிகள் அடியார்களுக்கு உணர்வுபூர்வமானவையாகும்.



அலைகடல் தாலாட்டும்
நயினையிலே
நாகபூஷணியாய் அங்கு
உறைபவளே
நாகம் பூசித்த எங்கள்
நாயகியே
அடியார்கள் குறைதீர்க்க
வந்திடம்மா
ஊர்கூடி உமை நாடச்
செய்தவளே
மூவுலகும் காத்து
அருள்பவளே
உலகாளும் எங்கள்
நயினையம்மா
உன் அருளாசி உலகெங்கும்
பரப்பிடம்மா...

- நயினை ஆதி



## கொடியேற்றி எம்மக்களுக்கு நல் விடியலைத் தா தாயே

அலைகடல் நடுவே
வீற்றிருந்து எல்லையில்லா
அருள் பாலிக்கும் நாகபூஷணித் தாயே
அடியவர்கள் குறைகள்
தீர்க்கும் அமுதசுரபித் தாயே
அகந்தையை அழித்து நல்

ஆற்றலைக் கொடுக்கும் தாயே
நாட்டில் உணவுத்தட்டுப்பாடு
உச்சமடைந்து விட்டது தாயே
எம் குறைகளை உம்மிடம் கூறாமல்
இனி யார்க்கு எடுத்துரைப்பது தாயே
கொடியேற்றி எம் மக்களுக்கு
நல் விடியலைத் தா தாயே..

நயினை விசு இராசநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணிவெடி அகற்றும் பணி;

# ஓராண்டு நிதியுதவி ஒப்பந்தம் கைச்சாத்து

கொழும்பு, ஜூன் 29


ஜப்பான் அரசாங்கத்தால் 'டாஸ்' மனிதநேய கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தின் 13ஆவது வருட நிறைவை முன்னிட்டு கண்ணிவெடி அகற்றும் பணிக்கு அடுத்த ஓராண்டுக்கான நிதியுதவி ஒப்பந்தம் நேற்று கைச்சாத்திடப்பட்டது.

முகமாலையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஜப்பான் நாட்டின் தூதுவர் மிசுகோஸி கிடேகி நிகழ்வில் கலந்துகொண்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்.

இதன்போது 6 லட்சத்து 81 ஆயிரத்து 812 அமெரிக்க டொலருக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

நிகழ்வில் டாஸ் நிறுவன இயக்குநர், நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர், செயற்திட்ட முகாமையாளர் மற்றும் கண்ணிவெடி அகற்றும் குழுவினர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஜப்பான் நாட்டின் நிதியுதவியில் மாத்திரம் இதுவரை 6.4 சதுரகிலோமீற்றர் பரப்பில் கண்ணிவெடி அகற்றப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



இணுவில் கந்தசாமி ஆலயத்தின் தேர்த்திருவிழா, பல்லாயிரம் மக்கள் புடைசூழ நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. இதன்போது பக்தர்கள் காவடி, தீச்சட்டி போன்ற நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர். (ஒ-14-27)

# மருதமடுப் பெருவிழாவுக்கு 200,000 பக்தர்கள் குவிவர்

## ஏற்பாடுகள் முழுமை

மன்னார், ஜூன் 29

**இந்தவருட மடுப்பெருவிழாவில் சுமார் 2 லட்சம் பக்தர்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று மடுத் திருத்தல பரிபாலகர் தெரிவித்துள்ளனர்.**

எதிர்வரும் 2ஆம் திகதி மடுப்பெருவிழா இடம்பெறவுள்ளது.

இந்தப் பெருவிழா தொடர்பான ஆயத்த கலந்துரையாடல் மன்னார் மாவட்டச் செயலர் அ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

திருவிழாவை முன்னிட்டு ஏற்கனவே மடுத் திருத்தலத்திலுள்ள 350 வீடுகளும் பக்தர்களால் பெறப்பட்டுள்ளன.

விழாவுக்கான கொடியேற்ற நாளிலிருந்து இதுவரைக்கும் 300க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தற்காலிக கூடாரங்கள் அமைத்துள்ளதுடன் தொடர்ந்து பக்தர்கள் வருகை தந்த வண்ணம் உள்ளனர்.

வருகைதருபவர்களுக்கான உணவுகள் கிடைக்கக்கூடிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

மற்றைய வசதிகள் திருப்திகரமாக நடைபெற்று வருகின்றன.

ஆலயப் பகுதிக்குள் உணவுப் பொருள்கள் விற்பனை செய்வோர் கூடிய விலைக்கு விற்பனை செய்வதால் பக்தர்கள் முறைப்பாடு செய்து வருகின்றமையால் இவற்றை கவனத்தில் எடுக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

மடு ஆலயத்துக்கு 10 நுழைவாயில்கள் இருக்கின்றபோதும் தற்பொழுதுள்ள பக்தர்களின் வருகையை கவனத்தில் எடுத்து இதுவரை 6 நுழைவாயில்கள் திறந்து விடப்பட்டுள்ளன என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (ம-60)

# நெருக்கடிகளுக்குத் தீர்வு கோரி கையெழுத்து சேகரிப்பு ஆரம்பம்

வவுனியா, ஜூன் 29

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணக் கோரியும் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராகவும் 25 ஆயிரம் பேரின் கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை வவுனியா இலுப்பையடியில் இன்று மு.ப.10 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளதாக சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு தெரிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியானது முழு நாட்டுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள போதும் வவுனியா மாவட்டம், விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட மாவட்டம் என்ற அடிப்படையில் கடுமையாக பாதிப்படைந்துள்ளது. அத்துடன் கல்விச் சமூகமும் வெகுவாகப் பாதிப்படைந்துள்ளது. இது ஒரு மோசமான நிலைமைக்கு நாட்டைக் கொண்டு செல்லப் போகின்றது. பட்டினிச் சாவை எமது சமூகம் எதிர்நோக்கியுள்ள துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே வவுனியா மாவட்டத்தில் உள்ள 25 ஆயிரம் மக்களை இலக்காகக் கொண்டு அவர்களின் எதிர்ப்பை பொருளாதார நெருக்கடிக்கு எதிராக அணிதிரளச் செய்து இந்தக் கையெழுத்துச் சேகரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்று அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. (ஒ-14-110)

# கிளி.விவசாயிகள், மீனவர்களுக்கு பங்கீட்டு அட்டையில் எரிபொருள்

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயிகளுக்கும் மீனவர்களுக்கும் பங்கீட்டு அட்டை மூலம் எரிபொருள் வழங்குவதற்கு மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய தற்போது நடைபெறவுள்ள சிறுபோக அறுவடைக்கு, விவசாயிகளுக்கு பச்சை நிற பங்கீட்டு அட்டை மூலம் எரிபொருள் வழங்கப்படவுள்ளது.

எரிபொருள் பெற்றுக்கொள்வதற்கு விவசாயிகளின் விவரங்கள் கமக்கார அமைப்புக்கள் ஊடாக மாவட்டச் செயலகத்துக்கு விரைவாக அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14-13)



# மரபு கையளிப்பும் தமிழறிஞர் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் தமிழ் மன்றத்தின் ஒழுங்கமைப்பில் 'மரபு கையளிப்பு' என்ற தொனிப்பொருளில் மரபு கையளிப்பும் தமிழறிஞர் கௌரவிப்பும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

மாணவ ஆசிரியர்களால் மனதை கவரும் கலை நிகழ்ச்சிகளும், அருகிவரும் கூத்துக்கலைகளும், ஆட்டக் கூத்துக்களும் இடம்பெற்றன.

நிகழ்வில், சிறப்புரை ஆற்றிய பேராசிரியர் அ. சண்முகதாஸ் தமிழின் அரிய பொக்கிஷங்களை எடுத்துக் காட்டி காலங்காலமாக அவை தமிழ் மரபில் எவ்வாறு கையளிக்கப்பட்டு வந்தன என்பதை சுட்டிக்காட்டினார்.

இணைப்பாடவிதானத்தை மாணவர்கள் மத்தியில் எவ்வாறு கொண்டு செல்ல வேண்டும் என்பதை தனது அனுபவத்தின் ஊடாக எடுத்துக்காட்டினார்.

இந்த நிகழ்வில், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் தலைவரும் யாழ்ப்பாண பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவரும் முன்னாள் வாழ்நாள் பேராசிரியருமான அ.சண்முகதாஸ், அவரது பாரியார் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ், கல்லூரியின் பீடாதிபதி சுப்பிரமணியம் பரமானந்தம், கல்லூரியின் விரிவுரையாளர்கள், மாணவ ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ய-7)

# உப உணவுப் பயிர்ச்செய்கையில் விலகும் முல்லை விவசாயிகள்

முல்லைத்தீவு, ஜூன் 28

முல்லைத்தீவு மாவட்டத்தில் உப உணவுப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதில் இருந்து விவசாயிகள் விலகி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மாவட்டச் செயலகம், விவசாயத் திணைக்களம் என்பன விவசாயிகள் மத்தியில் தொடர்ச்சியாக உப உணவுப் பயிர்ச்செய்கையில் ஈடுபட வேண்டும் என வலியுறுத்தி வரும் நிலையில் விவசாயிகள் இவ்வாறு செய்கையில் இருந்து விலகி வருகின்றனர்.

குரங்குகள், கால்நடைகளால் ஏற்படும் அழிவுகள், தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி, உரம் கிடைக்காமை, சந்தை வாய்ப்பின்மை போன்ற பல்வேறு காரணங்களால் விவசாயிகள் பயிர்ச்செய்கையில் இருந்து விலகி வருகின்றனர்.

> **"மாந்தை கிழக்கு, துணுக்காய் பகுதிகளில் 2 ஆயிரம் கிலோ வரையான உளுந்து, எள்ளு என்பன நியாய விலை கிடைக்காததால் தேங்கிக் கிடக்கின்றன."**

கடந்த காலங்களில் உப உணவுப் பயிர்ச்செய்கையில் கூடுதலாக விவசாயிகள் ஈடுபட்டனர். அதன்போது அறுவடை செய்யப்பட்ட உளுந்து, எள்ளு போன்ற தானிய வகைகளின் விலைகள் தற்போது அதிகரித்துள்ளன.

எனினும் மாந்தை கிழக்கு, துணுக்காய் பகுதிகளில் 2 ஆயிரம் கிலோ வரையான உளுந்து, எள்ளு என்பன நியாய விலை கிடைக்காததால் தேங்கிக் கிடக்கின்றன.

இந்த நிலையிலேயே பயிர்ச்செய்கையில் இருந்து விவசாயிகள் விலகிவரும் நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-14-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காட்டுச் சட்டங்களால் நாட்டை ஆள முடியாது

*எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 29

ஒரு நாட்டை காட்டுச்சட்டத்தால் ஆள முடியாது எனவும், அதற்காக ஜனநாயக ரீதியிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பல தரப்பு பிரதிநிதிகள் மற்றும் கட்சித் தலைவர்களுடன் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனநாயக ரீதியான வெற்றிக்காக நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியேயுள்ள பரப்புகளிலும் தொடர் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன் ஊடாக மக்களுக்கான வெற்றிகளை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

குறிப்பாக 21ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு அதிகாரங்களை கட்டுப்படுத்தும் தடைகள் மற்றும் சமன்பாடுகள் ஊடாக ஜனநாயகத்தை பலப்படுத்துவதே எனது ஒரே நோக்கமாகும் - என்றார். (ம)

# ஆஸி. செல்ல முற்பட்ட 47 பேர் நேற்றும் கைது

கொழும்பு, ஜூன் 29

**அவுஸ்திரேலியாவுக்கு படகுமூலம் சட்டவிரோதமாக செல்ல முயன்ற 47 பேரை சிறிலங்கா கடற்படையினர் நீர்கொழும்புப் பகுதியில் வைத்து நேற்று கைது செய்துள்ளனர்.**



மீன்பிடிப் படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக செல்ல முயன்றபோதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு - பாலமீன்மடு பிரதேசத்தில் வைத்து அவுஸ்திரேலியாவுக்குச் சட்டவிரோதமாக செல்ல முயன்ற 54 பேர் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

அதேவேளை நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடியால் நாட்டை விட்டு தப்பிச் செல்ல முயல்வோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# ரயில் கட்டணத் திருத்தம் அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜூன் 29

ரயில் கட்டணத்தில் திருத்தத்தை மேற்கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

போக்குவரத்து நெருக்கடி மற்றும் எரிபொருள் பிரச்சினைகளால் தற்போது மக்கள் அதிகளவில் ரயில்களை பயன்படுத்துகின்றனர்.

அண்மைக்காலமாக ரயில்களில் பயணிப்போரின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு ரயில் கட்டணங்கள் குறைவாக உள்ளமையே பிரதான காரணம் எனவும் இதனால் பல அசௌரியங்களை ரயில்வே திணைக்களம் எதிர்நோக்கியுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் போக்குவரத்து அமைச்சரால் முன்வைத்த ரயில் கட்டணத் திருத்தத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## நிர்வாகத் தெரிவு

வலிகாமம் மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட வட்டுக்கோட்டை கொத்துத்துறை இந்து மயான அபிவிருத்திச்சபை நிர்வாகத் தெரிவு கடந்த ஞாயிற்றுக்கிழமை யா/வட்டு திருநாவுக்கரசு வித்தியாசாலை மைதானத்தில் வலி. மேற்கு தவிசாளர் த. நடனேந்திரன் தலைமையில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் புதிய உறுப்பினர்களாக தலைவர் வே. கணேசரத்தினம், உப தலைவர் ப.சோழன், செயலாளர் வி.வள்ளிசாந்தன், உப செயலாளர் து.நாகேஸ்வரன், பொருளாளர் க. பாலச்சந்திரன் ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக சி.ஸ்ரீஜீவா, ம. விஜிமருகன், அ.து, சடாட்சரலிங்கம், ச.ஸ்ரீபரன், ப.ஸ்ரீதரன், சிவரூபன். சு.மகேந்திரம், சி.சிங்கராசா, த.குமரதாசன், தி. இளங்குமரன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

# தம்மிக்கவின் அமைச்சின் கீழுள்ள விடயதானங்கள்

*ஜனாதிபதியால் வர்த்தமானி வெளியீடு*

கொழும்பு, ஜூன் 29

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேராவுக்கு வழங்கப்பட்ட முதலீட்டு மேம்பாட்டு அமைச்சின் கீழ் வரும் விடயதானங்கள் அடங்கிய வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி இலங்கை முதலீட்டு சபை, குடிவரவு-குடியகல்வு திணைக்களம், கொழும்பு துறைமுக பொருளாதார ஆணைக்குழு மற்றும் கொழும்பு துறைமுக நகர சார்ந்த கருத்திட்டம் என்பன முதலீட்டு மேம்பாட்டு அமைச்சின் கீழ் விடயதானங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. (ச-இ)


## மரண அறிவித்தல்



சைவத்தமிழ் மூதாட்டி

### வேலுப்பிள்ளை அன்னலட்சுமி

அரியாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை அன்னலட்சுமி அவர்கள் நேற்று (28.06.2022) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை சின்னப்பிள்ளை தம்பதிகளின் சிரேஸ்ர புத்திரியும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் நாகமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அருந்தவச்செல்வி (அருள்) மற்றும் அருந்ததி (குடும்பநல உத்தியோகத்தர் - யா/மாநகரசபை), அருட்செல்வன் (மாங்கனி-யா/பலநோக்கு கூ.சங்க ஊழியர்), அருளமுதா, அருள்விந்தன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயாரும் மதிகரன் (ஓய்வு நிலை மின்னியலாளர் - யாழ் பல்கலைக்கழகம்), இராஜேஸ்வரி (கைதடி), புஸ்பவதி (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமியாரும் சோபிதா (ஆசிரியை-மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி), சஞ்சயன், காருக்ஷி, கோபிராம், பிரணதி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் காலஞ்சென்றவர்களாகிய இராசு, செல்லக்கண்டு, பாக்கியலட்சுமி ஆகியோரின் பெறாமகளும் செல்வமணி, புஸ்பமணி, காலஞ்சென்ற பஞ்சாட்சரம் (விஷகடி வைத்தியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களாகிய சோக சோபித சொர்ணக்கவிக்குயில் V.K. இரத்தினம், நாகலிங்கம், மதுரவேணி, ஏரம்பு, யோகம்மா, சின்னம்மா, முருகேசு, தம்பையா, ஆறுமுகம் மற்றும் தம்பிரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.27, வேலப்பர் வீதியிலுள்ள அன்னாரது இல்லத்தில் இன்று (29.06.2022) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

27, வேலப்பர் வீதி,
அரியாலை.

தகவல்: குடும்பத்தினர்
077 904 4233


# எரிபொருள் நிலையங்களுக்கான விநியோகம் தற்காலிக நிறுத்தம்

*எண்ணெய் களஞ்சியசாலை அறிவிப்பு*

கொழும்பு, ஜூன் 29

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான எரிபொருள் விநியோக நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளது என கொலன்னாவை பெற்றோலிய எண்ணெய் களஞ்சியசாலை அறிவித்துள்ளது.

நாட்டில் பொருளாதார நெருக்கடி அதிஉச்ச தீவிர நிலையை அடைந்துள்ள நிலையில் கையிருப்பிலுள்ள எரிபொருளின் அளவும் மிக குறைவாகவே காணப்படுகின்றது. இதனால் அரசாங்கம் அத்தியாவசிய சேவைகளை மாத்திரமே நடத்திச் செல்ல தீர்மானித்துள்ளது.

> **கையிருப்பிலுள்ள எரிபொருள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இதனால் அரசு அத்தியாவசிய சேவைகளை மட்டுமே நடத்திச் செல்ல தீர்மானித்துள்ளது.**

இந்த நிலையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளது என களஞ்சியசாலை மேலும் தெரிவித்துள்ளது.

அதேவேளை திட்டமிடப்பட்ட எரிபொருள் தாங்கிக் கப்பல்கள் இலங்கைக்கு வருவது தாமதமடைந்துள்ளது எனவும், அவை இலங்கைக்கு வருவதற்கான திகதியை உறுதிப்படுத்த முடியாது எனவும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 13 . 08 . 1944

விண்ணில் 21 . 06 . 2020

## அமரர் ருக்குமணி ஆனந்தவேல்

(இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்)

திதி: பூர்வபக்க பிரதமை

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்திட்டு
விண்ணகம் சென்றிட்ட சமூகசேவகி, சமூகபந்து,
நீர்வைக் குரிசில், சிறந்த பெண்மணி.
ஆண்டுகள் இரண்டாகிப் போனதோ
அன்னையே நின் வதனம் கண்டு
அன்பாய் உங்களின் புன்னகையை
மறுமுறை காணபோமா தாயே..............
அருவமாய் எமை ஆண்டருள்வாய்
அன்னையே ! ! !

உங்களின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி !!!

நீர்வேலி கந்தசுவாமி கோயிலடி,
நீர்வேலி.

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(cs.19840) (2.6)

# கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் வடக்கு பிரதேசசபையில் கடமையாற்றும்
திரு. செல்லத்துரை வசீகரன் அவர்களின் அன்புத் தந்தை

## சின்னையா செல்லத்துரை

நேற்று (2022.06.28) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.
அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை.

(cr 36271) (2.6)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

# மரண அறிவித்தல்



பிறப்பு 13 . 02 . 1959

இறப்பு 28 . 06 . 2022

## நாகலிங்கம் நாகராசா

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், நுணாவில் மேற்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் நாகராசா நேற்று (28.06.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - காமாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், கமலாவின் அன்புக் கணவரும், ஜீவரூபனின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, பரமேஸ்வரி, திரிசாம்பாள் மற்றும் புண்ணியமூர்த்தி, சுப்பிரமணியம், சறோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகாலிங்கம், சிவகுரு, மனோராணி, காலஞ்சென்ற ரவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2022) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.30 மணியளவில் நுணாவில் குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன்: 074 292 4225,
077 958 8463

(cs.45400) (2.6)

# மரண அறிவித்தல்



## வைரமுத்து இரத்தினசபாபதி

[முன்னாள் பிரபல வர்த்தகர் யாழ் மார்க்கட்]

நயினாதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை ஓடை லேனில் வசித்தவரும் தற்போது திருநெல்வேலி மாரியம்மன் லேனில் வசித்தவருமாகிய வைரமுத்து இரத்தினசபாபதி அவர்கள் 27.06.2022 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து-வள்ளியம்மை (ஆச்சிப்பிள்ளை) தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சாமியார் வேலுப்பிள்ளை-பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும் ஞானப்பூங்கோதை (சிங்கினி) அவர்களின் அன்புக்கணவரும் பஞ்சாட்சரதேவி, சோதிதாசன் (பிரான்ஸ்), கெங்காதரன் (பிரான்ஸ்), கிருஸ்ணராஜா (ராணி ரெஸ்ரோரண்ட் உரிமையாளர் - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கதிர்காமநாதன் (இளைப்பாறிய தபால் உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம்), கல்யாணி (பிரான்ஸ்), சுதர்சனா (பிரான்ஸ்), மனோகரராணி (பிரான்ஸ்) ஆகியோரின் அருமை மாமனாரும், அபிராமி, ஹர்ஷனா, கீர்த்தனா, கஜமுகன், விஸ்ணுகன், கார்த்திகன் ஆகியோரின் அருமைப்பேரனும் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு, அன்னலெட்சுமி, அன்னபூரணம், சபாரத்தினம் (ஐயா மாஸ்ரர்) மற்றும் சிவபாக்கியம் (பிள்ளையம்மா - கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான பவானியம்மா, கோபாலபிள்ளை, தங்கராசா, நடராசா மற்றும் புவனேஸ்வரி காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, சிவபாதமணி மற்றும் வடிவாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனரும் சரஸ்வதி காலஞ்சென்றவர்களான நாகலட்சுமி, கனகசபை ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.06.2022) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

/2 மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்
(K.K நாதன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Music of Spirit**
Team presents

# ஆத்ம இசை

குழுவினர் வழங்கும்

Come and Enjoy Your Spirit!
Indian Cultural Music and Dance program



H. H. SHRI MATAJI NIRMALA DEVI

வருக ஆத்ம அனுபவம் பெறுக!
இந்திய கலாச்சார இசை, நடன நிகழ்ச்சி



**Pt. Dhananjay Dhumal**
International Harmonium Player, Bollywood Music Director



**Anandita Basu**
Sufi, Qawwali, Classical, bhajanand Spiritual Bollywood Singer



**Lata Didi Dhumal**
Famous Bollywood Singer, Folk & Devotional Singer

Get your Self Realization through SAHAJAYOGA
Music with Bhakti, Dance with Bhava. Together, Enlighten our minds, Uplift our souls, and enhances our life.
சகஜ யோகா மூலம் உங்கள் ஆத்ம விழிப்புணர்வு பெறுங்கள் பக்தியோடு கூடிய இசை, பாவனையோடு கூடிய நடனம், ஒன்றிணைந்து, நம் மனதை உள்ளத்தை ஒளிரச் செய்ய,வாழ்வை மேம்படுத்தும் ஆத்மா உயர்விற்காக.

DATE: 2nd & 3rd JULY 2022 TIME: 4:00 PM TO 6:00 PM
VENUE: Ilankai Venthan Hall,
இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி, யாழ்ப்பாணம்.
63, College Road, Neeraviyadi, Jaffna.
Contact & Follow up Meditation: Mr. Vel (075 814 3414)
Theva (077897 0509) +1 201417 2986


| | | | |
|---|---|---|---|
| Jaffna July 2&3 | Batticaloa July 5 | Kandy July 10 | NuwaraEliya July 12 |
| Bogawanthalawa July 13 | Colombo July 16&17 | யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கண்டி, நுவரெலியா, பொகவந்தலாவ, கொழும்பு. | |

YOU ALL ARE CORDIALLY INVITED
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

FREE ENTRY
அனுமதி இலவசம்


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
09 - 10 - 1938



மறைவு
30 - 05 - 2022

கடந்த 30.05.2022 திங்கட்கிழமை அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

## அமரர் குருநாதி செல்லர்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 27.06.2022 திங்கட்கிழமை காலை 7.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (29.06.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைகின்றோம்.

கைதடி மத்தி,
குமரநகர்,
கைதடி

குடும்பத்தினர்

# கற்கைநெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையானது 2022 இரண்டாம் அரையாண்டுக்கான என்.வி.கியூ சான்றிதழ் ஒருவருட மற்றும் ஆறு மாத முழு நேர கற்கைநெறிகளை எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதியிலிருந்து ஆரம்பிக்கவுள்ளது.

அதற்கமைய வீட்டு மின்னிணைப்பாளர், டீசல் மற்றும் பெற்றோல் இயந்திர தொழிநுட்பவியலாளர், கணினி வன்பொருள் திருத்துநர், அறை பரா மரிப்பாளர், குழந்தை பராமரிப்பாளர், கணினி பிரயோக உதவியாளர், அலுமினியம் பொருத்துநர், நீர்க்குழாய் பொருத்துநர், தையலாளர் போன்ற கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை (என்.வி.கியூ) சான்றிதழுக்கான பயிற்சிநெறிகளாகும். விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை நாளை வியாழக்கிழமைக்கு முன்னர் மாவட்ட அலுவலகம், 4 ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் அல்லது பிராந்திய தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மேற்கொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-14)


## கடை / வீடு வாடகைக்குண்டு

K.K.S றோட் கொக்குவில் சந்திக்கு அண்மையில் கடை /வீடு வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு:- 0707337737

## வேலை வாய்ப்பு

**WINS HOME CARE - JAFFNA**
எமது நிறுவனத்திற்கு நிர்வாக உத்தியோகத்தர் பெண்பிள்ளை தேவை.
வயது எல்லை: 30 - 40.
கல்வித்தகைமை: A/L
கணினி, ஆங்கில அறிவு
சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
(cs 45403) (2.6)
077 970 5736, 077 970 0512

## விநியோகஸ்தர்கள் தேவை


யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் உள்ளூரில் துவிச்சக்கரவண்டி மூலம் பத்திரிகைப் பிரதிகளை, கடைகளுக்கு விநியோகம் செய்வதற்கு ஆர்வமுள்ளோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்புக்கு - 0716182182

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


# மரண அறிவித்தல்



## திரு.விஸ்வலிங்கம் சபாரத்தினம்

**தோற்றம்: 27.03.1940 மறைவு:25.06.2022**

காரைநகர் வலந்தலையைப் பிறப்பிடமாகவும் காரைநகர் மற்றும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த வி.சபாரத்தினம் அவர்கள் 25.06.2022 சனிக்கிழமையன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் ஞானசுந்தரம் தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான அண்ணாமலை பொன்னாச்சி தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற பவளத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கனகம்மா, கனகரத்தினம் மற்றும் யோகரத்தினம், ராஜேஸ்வரி, வைத்திய கலாநிதி விஜயரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற கனகமணி மற்றும் செல்லம்மா, தங்கராஜ், கணேசமூர்த்தி, சிவசோதி ஆகியோரின் மைத் துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (30.06.2022) வியாழக்கிழமை காலை 8.00 மணிமுதல் கல்கிசை மகிந்த மலர்ச் சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மு.ப 11.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று கல்கிசை பொது மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

T.P: 0771543859

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு...

இந்த நிதியுதவியானது பொருளாதார மற்றும் மனிதாபிமான உதவிகளாக அண்மையில் அமெரிக்கா உறுதியளித்த சுமார் 12 மில்லியன் டொலருக்கு மேலதிகமாக வழங்கப்படுகின்றது.

நேற்று நடைபெற்ற ஜி-7 உச்சிமாநாட்டில் கலந்துகொண்ட அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், அங்கு உரையாற்றும்போது இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

8 லட்சத்துக்கும் மேற்பட்ட இலங்கைச் சிறுவர்களுக்கான உணவுப் பாதுகாப்பு மற்றும் எதிர்வரும் 15 மாதங்களில் 27 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் பெண்களுக்கு உணவு அட்டைகளை (வவுச்சர்) வழங்குதல், பாடசாலை ஊட்டச்சத்துத் திட்டத்துக்கு ஆதரவளிப்பது இந்த நிதியுதவின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம், உணவு உற்பத்தியை அதிகரிக்க 30 ஆயிரம் விவசாயிகளுக்கு விவசாய உதவி மற்றும் நிதி உதவியை வழங்குதலும் இந்தத் திட்டத்தில் உள்ளடங்கும்.

இந்த நிதியுதவியுடன் கடந்த 16ஆம் திகதி முதல் இலங்கைக்கு அமெரிக்கா வழங்கும் உதவிகளின் மொத்தப் பெறுமதி 32 மில்லியன் டொலராக அதிகரித்துள்ளது. (அ-எ-இ)

## ஐ.ஓ.சி. மட்டுப்பாடு...

சைக்கிள்களுக்கு ஆயிரத்து 500 ரூபாவுக்கும், முச்சக்கர வண்டிகளுக்கு 2 ஆயிரத்து 500 ரூபாவுக்கும், கார்களுக்கு 7 ஆயிரம் ரூபாவுக்கும் பெற்றோல் நிரப்பப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## சீராக டீசல்...

அதேவேளை, தனியார் பஸ்களுக்கான டீசல் தொடர்ச்சியாகக் கிடைக்காவிட்டால் வெளிமாகாணங்களுக்கான பஸ் சேவைகளும், வடக்கு மாகாணத்துக்குட்பட்ட பஸ் சேவைகளும் முடங்க நேரிடும் என்று வட மாகாண தனியார் போக்குவரத்துச் சங்கத்தின் தலைவர் சிவபரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட கூட்டிணைக்கப்பட்ட பஸ் கம்பனிகளின் இணையத்தின் தலைவர் பொ.கெங்காதரன் இது தொடர்பில் தெரிவித்தபோது; யாழ்ப்பாணம் மாவட்டத்துக்குள் சேவையில் ஈடுபடும் பஸ்களுக்கான டீசல் நாளை (இன்று) புதன்கிழமை வழங்கப்படும் என்று வடபிராந்திய சாலை முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சியாக எமக்கு டீசல் வழங்கப்பட்டால் பஸ் சேவைகள் நடைபெறும். நாளை (இன்று) முதல் நயினாதீவு திருவிழா ஆரம்பமாகும் நிலையில் விசேட பஸ் சேவைகளை நடத்த எத்தனித்துள்ளோம். டீசல் கிடைத்தால் நயினாதீவு திருவிழாவுக்கான மேலதிக சேவைகள் நடத்தப்படும். டீசல் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளதால், பஸ் கட்டணமும் விரைவில் அதிகரிக்கப்படும் என்று தெரிவித்தார்.

வட மாகாண தனியார் போக்குவரத்துச் சங்கத்தின் தலைவர் சிவபரன் கருத்துத் தெரிவித்தபோது, தனியார் பஸ்களுக்கு எரிபொருள் வழங்க வேண்டுமென்று இலங்கை போக்குவரத்துச் சபைக்குப் பணிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்தில் ஆயிரம் பஸ்களுக்கு மேல் சேவையில் ஈடுபடுகின்றன. ஆனால், அவற்றில் 20 சதவீத பஸ்களுக்குக்கூட இதுவரை டீசல் விநியோகம் இடம்பெறவில்லை.

தற்போது 25 சதவீத பஸ்கள் சேவையில் ஈடுபட முடியாத நிலைமை காணப்படுகின்றது. ஒருநாள் சேவையில் ஈடுபட்டுவிட்டு 3 நாள்கள் டீசலுக்காகக் காத்திருக்க வேண்டியிருக்கின்றது.

கடந்த மூன்று நாள்களாக கோண்டாவில் சாலையில் காத்திருக்கும் தனியார் பஸ்களுக்கு இன்னமும் டீசல் வழங்கப்படவில்லை. நாளையும் (இன்று) டீசல் கிடைக்காவிட்டால் பஸ் சேவைகளை மேற்கொள்வது சிரமமாக இருக்கும் - என்று தெரிவித்தார். (அ-எ-125)

## நெருக்கடியை...

மன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

அதேவேளை, இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் எந்தவொரு காத்திரமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்றும், மக்களை ஏமாற்றுவதற்காகவே ஊடக சந்திப்புக்கள் நடத்தப்பட்டு தகவல்கள் வெளிப்படுத்தப்படுகின்றன என்றும் எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த மஹிந்தானந்த அளுத்கமகே, எரிபொருள் இறக்குமதி தொடர்பாக நேரடிப் பேச்சை நடத்துவதற்காக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஐக்கிய அரபு இராஜ்ஜியத்துக்கு விரைவில் செல்லவுள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

அதேநேரம், இந்தியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளில் இருந்தும் எரிபொருளைக் கொள்வனவு செய்வது தொடர்பாகவும் ஜனாதிபதி இராஜதந்திர நகர்வுகளை மேற்கொண்டுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, எரிபொருள் கொள்வனவு சம்பந்தமாக பேச்சு நடத்துவதற்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன கட்டாருக்கு பயணமொன்றை மேற்கொண்டு, நேற்று முக்கியமான சந்திப்புக்களை நடத்தியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சும் வெற்றியளிக்கும் சாத்தியம் இருப்பதாக நம்பும் அரசு, தற்போதைய நெருக்கடி நிலைமை விரைவில் தீரும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கத்திடம் நாட்டின் பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய திட்டங்கள் எவையும் இல்லை என்று குற்றஞ்சாட்டியுள்ள எதிர்க்கட்சிகள் தற்காலிகத் தீர்வுகளால் எந்தப் பயனும் இல்லை என்று சுட்டிக்காட்டியுள்ளன. அதேநேரம் அரசாங்கத்தின் மீதுள்ள மக்களின் அதிருப்தியைப் போக்குவதற்காக ஊடக சந்திப்புக்களை நடத்தி பொய்யான வாக்குறுதிகளை அரசாங்கத் தரப்பினர் மக்களுக்கு வழங்குகின்றனர் என்றும் அவை சுட்டிக்காட்டியுள்ளன. (அ-எ-இ)

## பஸ்...

நேற்று போக்குவரத்து அமைச்சு, தேசிய போக்குவரத்து ஆணைக்கு மற்றும் பஸ் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இடையே பஸ் கட்டணத் திருத்தம் தொடர்பாகப் பேச்சு நடைபெற்றது.

பஸ் கட்டணத்தை 30 வீதத்தாலும், ஆகக் குறைந்த கட்டணத்தை 40 ரூபாவாகவும் அதிகரிக்க இணக்கம் காணப்பட்டது என்று அகில இலங்கைத் தனியார் பஸ் சங்கச் சம்மேளனத்தின் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்தார்.

ஆயினும் அவ்வாறான இணக்கம் எதுவும் எட்டப்படவில்லை என்றும், உடன்பாடு எதுவும் இன்றியே பேச்சு முடிவுற்றது என்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவும், இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கமும் தெரிவித்தன.

இந்தப் பின்னணியில் தொழிற்சங்கங்கள் கோரிய கட்டண அதிகரிப்புத் தொடர்பான தீர்மானம் இன்று போக்குவரத்து அமைச்சுக்கு அறிவிக்கப்படும் என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது. (அ-எ-இ)

## கெஞ்சுகிறார்...

டுள்ள எரிசக்தி நெருக்கடியைத் தீர்ப்பதற்கான வாய்ப்புக்கள் தொடர்பில் இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.

இயற்கைத் திரவ வாயு மற்றும் திரவ பெற்றோலிய எரிவாயு என்பவற்றைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

நாட்டில் எரிபொருள் மற்றும் எரிவாயு நெருக்கடி தீவிரம் பெற்றுள்ள நிலையில், நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சர்களான காஞ்சன விஜயசேகர மற்றும் ஹாபிஸ் நஸீர் அஹமட் ஆகியோர் நேற்றுமுன்தினம் கட்டார் சென்றிருந்தனர். (அ-எ-இ)

## மூன்று...

நேற்றுத் தீர்மானித்துள்ளது.

இந்தத் தீர்மானத்தால் பணியாளர்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன என்று தெரிவித்து ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணி பணிப் புறக்கணிப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது.

நேற்று நடந்த விசேட கூட்டத்தில் போக்குவரத்துச் சிரமங்களைக் கருத்திற்கொண்டு அஞ்சல் அலுவலகங்கள் மற்றும் உப அஞ்சல் அலுவலகங்களை செவ்வாய், புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் மட்டும் திறப்பது என்று தபால் திணைக்களம் தீர்மானித்தது. எதிர்வரும் 10ஆம் திகதிவரையில் இந்த நடைமுறை இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வாரத்தில் மூன்று நாள்கள் மட்டும் அஞ்சல் அலுவலகங்கள் திறக்கப்படும் நிலையில், சனிக்கிழமைக் கொடுப்பனவு உட்பட பணியாளர்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன என்று ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.

தபால் திணைக்களத்தின் இந்தத் திடீர் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அவசர பணிப்புறக்கணிப்புக்கு அழைப்பு விடுத்துள்ள தொழிற்சங்க முன்னணி, பணியாளர்கள் தங்கள் கடமைகளில் இருந்து விலகிச் செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது. (அ-எ-இ)

## மின் கட்டண...

திருத்தப்பட்டு, பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்மொழிவுகள் வெளியிடப்பட்டுள்ளது.

ஒன்று முதல் 30 அலகு வரையிலான வீட்டு மின்சார உபயோகத்துக்கான தற்போதைய மாதாந்த நிலையான கட்டணமான 30 ரூபாவை, 150 ரூபாவாக அதிகரிக்க ஆணைக்குழு முன்மொழிந்துள்ளது. அதற்கு இலங்கை மின்சார சபை 430 ரூபாவை முன்மொழிந்திருந்தது.

தற்போது ஒன்று முதல் 30 அலகுக்கு இடையில் 2 ரூபா 50 சதங்களாகவுள்ள அலகொன்றின் கட்டணத்தை 8 ரூபாவால் அதிகரிக்க இலங்கை மின்சார சபை முன்வைத்த முன்மொழிவுக்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இணக்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை - 31 தொடக்கம் 60 அலகுகளுக்கு இடைப்பட்ட நிலையான மின் கட்டணத்தை ஆயிரத்து 100 ரூபாவால் அதிகரிக்க இலங்கை மின்சார சபை முன்மொழிந்திருந்தபோதும், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு 300 ரூபாவை அதிகரிக்க முன்மொழிந்துள்ளது.

தற்போது 4 ரூபா 85 சதமாகவுள்ள 31 தொடக்கம் 60 அலகுகளுக்கு இடைப்பட்ட மின்சார அலகு ஒன்றின் விலையை 12 ரூபா 50 சதங்களால் அதிகரிக்க வேண்டுமென இலங்கை மின்சார சபை பரிந்துரைத்துள்ளபோதும், கட்டணத்தை 10 ரூபாவால் மாத்திரமே அதிகரிக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. (அ-எ-இ)

## அத்தியாவசியக்...

செயலர் அறிவித்துள்ளார்.

கடந்த 20ஆம் திகதி வெளியான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் அரச, அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத் தலைவர்களின் பரிந்துரைக்கு அமைய அத்தியாவசியக் கடமைகளில் ஈடுபடும் அலுவலர்களுக்கு எரிபொருள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தினங்களில் பொதுமக்களுக்கு எரிபொருள் வழங்கப்படாது என்றும் அதனால் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொதுமக்கள் காத்திருப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் தெரிவித்துள்ளார். போதுமான எரிபொருள் கிடைக்கும் பட்சத்தில் மக்களுக்கும் எரிபொருள் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## பதிவாளர்...

இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தினங்களில் காலை 8.30 முதல் மாலை 4 வரை இந்தச் சேவைகள் இடம்பெறவுள்ளன என்று பதிவாளர் நாயகம் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆயினும், பதிவாளர் திணைக்களத்தின் பத்தரமுல்ல, இசுருபாய வளாகத்தில் அமைந்துள்ள கிளை அலுவலகம் மற்றும் குருநாகல், கண்டி, மாத்தறை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள கிளை அலுவலகங்கள் உரித்தான பிரதேச செயலகங்களின் மாவட்ட பதிவாளர் பிரிவு வாரத்தின் 5 நாள்களுக்கு வழமைபோல இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதி இல்ல வீதியால் பயணிக்க

# ஹிருணிகாவுக்கு பொலிஸார் தடை

கொழும்பு, ஜூன் 29

கொழும்பிலுள்ள ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்துக்குச் செல்லும் வீதியால் பயணிக்க முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு பொலிஸார் தடை விதித்துள்ளனர்.

இதுதொடர்பில் அவர் தெரிவிக்கையில்;

நான் எனது இரு நண்பர்களுடன் குறித்த வீதியில் அமைந்துள்ள வங்கி ஒன்றுக்குச் செல்ல முற்பட்டேன். அங்கு பொலிஸார் உடனடியாக தடுப்பு வேலிகளை அமைத்து மக்கள் பயணிக்க அனுமதி வழங்கியபோதும் எமக்கு அந்த வீதியால் பயணிக்க தடை விதித்துள்ளனர்- என்றார். (ச-இ)

## சிங்கள வகுப்புகள்

அடிப்படை தொடக்கம் O/L மாணவர்களிற்கும் சிங்களம் எழுத, பேச கற்பிக்கப்படும்.

அரச ஊழியர்களிற்கான விசேட வகுப்புகளிற்கும் கற்பிக்கப்படும்.

நிலையம் :- யாழ்ப்பாணம், கிளிநொச்சி, சுன்னாகம்.

தொடர்பு: 077 157 9429 (CS 44602)1-6

## தேவை

உடுப்பிட்டி காணிக்கு முட்கிளுவை, சீமைக்கிளுவை தடிகள், பாவித்த கொங்கிறீற் தூண்கள் அல்லது தேக்கம் கட்டைகள் உடன் தேவை. (CS 19846) (2.6)

077 381 9855

## வேலை வாய்ப்பு

பல்பொருள் விற்பனை நிலையமொன்றிற்கு கணினி அறிவுள்ள பெண் பிள்ளைகள் (சங்கானை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது)

072 277 0726

## சமையலாள் தேவை

கொழும்பில் உள்ள சைவ வீடு ஒன்றிற்கு நன்கு சைவ உணவுகள் சமைக்கத்தெரிந்த சமையலாளர் தேவை. ஆண் / பெண் கவர்ச்சிரமான சம்பளம், உணவு, தங்குமிடம் உண்டு. மேலதிக விவரங்களுக்கு.

077 896 4008 இதற்த அழையுங்கள்

## பணியாளர் தேவை

யாழ். பலாலி வீதி, ஆரியகுளத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள அலுவலகம் ஒன்றுக்கு கணினியில் பதிவேற்றம் செய்யக்கூடிய பெண் பணியாளர் தேவை.

077 353 3809, 077 373 5338


## பணிப்பெண் தேவை

கொழும்பில் உள்ள மருத்துவர் வீடொன்றில் தங்கியிருந்து குழந்தைகளை பராமரிப்பதற்கும் வீட்டு வேலை செய்வதற்கும் அனுபவமுள்ள பெண் தேவை. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

076 128 3990

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 02 • 02 • 1937



மறைவு 11 • 07 • 2021

### அமரர் சுப்பர் வடிவேலு

திதி: 29.06.2022

அன்பின் திருவுருவே
எட்டமுடியாத தொலைவு சென்று
ஆண்டொன்று அல்ல ஓராயிரம் ஆகலாம்
காலங்கள் விடை பெறலாம்
நெஞ்சில் பதிந்த நினைவலைகள்
- என்றென்றும்
நம்மை விட்டு நீங்காது

நாகர்கோவில் தெற்கு,
நாகர்கோவில்.
077 707 6077

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(cr.859342746)

# அறிவித்தல்

1927.11.06ஆம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் K.V.சின்னத்துரை அத்தாட்சிப்படுத்திய 285 ஆம் இலக்க உறுதிக்கு உட்பட்ட "ஆலாத்திவெளி தென்னம் தோட்டம்" என்ற நாமமுடைய நாவற்குழி பாலத்திற்கு அண்மையில் அமைந்த 26 ஏக்கர் 1 றூட் 18 ½ பேச் விஸ்தீரணம் கொண்ட ஆதனம் அதன் மூல சொந்தக்காரரான வேலாயுதர் முத்துக்குமாரு ராசாவிடமிருந்து 03.01.2011ஆம் திகதி கொழும்பு பிரசித்த நொத்தாரிஸ் கே.பிரபாகரன் அத்தாட்சிப்படுத்திய 316ஆம் இலக்க அறுதிச்சாதனத்தால் மிஸ்ரிக்மிஷன் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனம் கொள்முதல் செய்து சொந்தக்காரரும் ஆட்சியாளருமாக இருந்து வருகின்றது.

மோசடியை தவிர்ப்பதற்கும் பொது மக்கள் நன்மை கருதியும் குறித்த ஆதனத்தை அல்லது அதன் பகுதியினை குறித்த கம்பனி தவிர்ந்த வேறு எவரிடமும் கொள்ளவனவு எவராவது செய்தால் அல்லது உரித்து மாற்றம் செய்யின் அதற்கு கம்பனி பொறுப்பாகமாட்டாது என்பதுடன் தோதான நீதிமன்றில் மோசடி விற்பனை, கொள்முதல் செய்பவர்கள் மீது வழக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

நிர்வாகி

மிஸ்ரிக் மிஷன் (பிறைவேட்) லிமிட்டெட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.